...வாந்துறைப் படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

யாழ் நகரில் ஒரு வான்வழி நிலையம்

SPICE TRAVELS & TOURS (PVT) LTD®

IATA

C/490



412, First Floor, Hospital Road, Jaffna.
(Adjoining Sangeetha Mobile Links)

Fly Line
Keethan - 0773 916 416
Tharshy - 0773 915 530

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2041 | மாசி 21 | சனிக்கிழமை | (05.03.2011) | பக்கங்கள் 12 | ஓசை – 156

## சூடுபிடிக்கும் தேர்தல் களம் துப்பாக்கிச்சூட்டில் இருவர் பலி

### ஆளும் கட்சிப் பிரசாரக் கூட்டத்தில் விபரீதம்

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரப் பணிகள் தென்பகுதியில் தற்போது சூடுஹஹபிடிக்க ஆரம்பித்துள்ளது. காலி மாவட்டத்தின் ரத்கம என்ற இடத்தில் நேற்று முன்னிரவு இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டி ருக்கின்றனர்.

நேற்றிரவு எட்டு மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆளும்கட்சி ஆதரவாளர்களே கொல்லப்பட்டிருக்கின் றனர். அத்துடன் ஆளும்கட்சி வேட்பாளர் ஒருவர் உட்பட 5 பேர் காயமடைந்துள் ளனர். இச்சம்பவத்தினைத் தொடர்ந்து பொலிஸார் துரித விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## விரைவாக அமைதியை ஏற்படுத்துங்கள் கடாபியிடம் ஜனாதிபதி கோரிக்கை



(கொழும்பு)

லிபியாவில் இயன்றவரை விரைவாக அமை தியை நிலைநாட்டுமாறும், பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்குமாறும் லிபியத் தலைவர் கேணல் கடாபியிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரியுள்ளார்.

லிபியத் தலைவர் கேணல் கடாபி, ஜனாபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று தொலைபேசி அழைப்பு விடுத்ததாகவும் அப்போது ஜனாதிபதி மகிந்த மேற்படி கோரிக்கையை விடுத்தாகவும் ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

# அரசின் இன நல்லிணக்க செயற்பாடுகளை அமெரிக்கா புரிந்துகொள்ள தவறியுள்ளது

### இலங்கை வெளிவிவகார அமைச்சு கவலை

(கொழும்பு)

**இலங்கையில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற பாடுகளைப் புரிந்துகொள்ள அமெரிக்க செனட் சபை தவறியுள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. உண்மை நிலையை சரிவரப் புரிந்துகொள்ளாததன் அடிப்படையிலேயே செனட் சபையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் அமைந்துவிட்டதாக வெளிவிவகார அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.**

அமெரிக்க செனட்டில் அண் மையில் நிறைவேற்றப்பட்ட தீர் மானங்கள் குறித்த விடயங் களின் மூலம் அவர்கள் கற் றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிறந்த செயற்பாட்டினை சரி யான முறையில் நோக்கத் தவ றியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு மேலும் தெரிவித்துள் ளது.

தேசிய ஒற்றுமைக்காக நல்லி ணக்க ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நட வடிக்கைகளை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறியுள்ளதாக வெளிவிவகார அமைச்சினால்

(11 ஆம் பக்கம் பார்க்க)



தேசிய சுகாதார கண்காட்சியை நேற்று ஆரம்பித்துவைத்த முதற் பெண்மணி திருமதி சிராந்தி ராஜபக்ஷ கண்காட்சிக் கூடங்களைப் பார்வையிடுவதைக் காணலாம்.

## இலங்கைக்கான கனேடியத் தூதுவர் வடபகுதிக்கு இரகசிய விஜயம்



(கொழும்பு)

இலங்கைக்கான கனேடியத் தூது வர் வடபகுதிக்கான இரகசிய விஜ யம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப் பாணம் மற்றும் வன்னிப் பகுதி களுக்கு சென்று திரும்பியிருக்கிறார்.

இந்த வாரத்தின் ஆரம்பத்தில் திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விஜயத்தின்போது இறுதி யுத்தம் இடம்பெற்ற பகுதிகளுக்கும் அவர் சென்று திரும்பியிருக்கிறார்.

இலங்கையின் மீள்கட்டுமானம் மற் றும் புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் இலங்கையர் உதவ முன் வரவேண்டும் என இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் புரூஸ் லெவி குறிப்பிட்டுள்ளார்.

இவ்வார முற்பகுதியில் இலங்கை யின் வட பகுதிக்கு விஜயம் மேற் கொண்டு முல்லைத்தீவு, யாழ்ப்பா ணம், வவுனியா மற்றும் கிளிநொச்சி அரசாங்க (11 ஆம் பக்கம் பார்க்க)

## குடிசன மதிப்பீடு ஏற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

குடிசன மதிப்பீட்டினை நாட ளாவிய ரீதியில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை தொகை மதிப்பு புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இலங்கையில் முதலாவது குடிசன மதிப்பீடு 1871 ஆம் ஆண்டு 3 ஆம் மாதம் 27 ஆம் திகதி நடத்தப்பட்டிருந்தது. இது வரை 13 தடவைகள் இலங்கை யில் குடிசன மதிப்பீடு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

இறுதியாக 2001 ஆம் ஆண்டு இலங்கையில் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. இதில் 25 நிர்வாக மாவட்டங்களில் 18 மாவட்டங்களில் மட்டுமே மதிப் பீடு (11 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவின் ஆயுட்காலம் நிறைவு; இறுதி அறிக்கை மிக விரைவில் வெளிவரும்

(ஜெனிவா)

இலங்கையின் போர்க்குற்றச்சாட்டுகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காக ஐ.நா. செயலாளர் நாயகத்தினால் நியமிக் கப்பட்ட நிபுணர் குழு கலைக்கப்படவுள்ளது.


கடந்த மாத இறுதியுடன் நிபுணர் குழு வின் கடமைகள் அனைத்தும் நிறைவடைந் துள்ளன. இக்குழுவின் பதவிக்காலம் நீடிக் கப்படுவதற்கு இதுவரை எந்த நடவடிக்கை யும் எடுக்கப்படவில்லை.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப் படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக் கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர்கள் குழு, தமது இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான சாட் சியப் பதிவுகள் அனைத்தையும் நிறைவு செய்துள்ளது.

இதனடிப்படையில், நிபுணர்கள் குழுவின் இறுதியறிக்கை அடுத்த சில தினங்களில் ஐ.நா செயலாளரிடம் கையளிக்கப்படும் என ஐ.நா சபையிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 28 ஆம் திகதி நிபுணர்கள் குழு வின் கடமைகள் நிறைவடைந்த போதிலும் நிபுணர்கள் குழுவின் பணிக்காலம் நீடிக்கப் படவில்லை.

இந்த நிலையில், நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடு வது தொடர்பில் (11 ஆம் பக்கம் பார்க்க)



## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(காரைநகர்)

காரைநகர் யாழ்.கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் பெ.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ள போட்டியில் விலங்கு, சுகாதார திணைக்கள மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.சிவநாதன் பிரதம விருந்தினராகவும், என்.நிசந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை வவுனியா பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி திருமதி வி.சிவநாதன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (50)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள்; கடற்தொழில் சங்கங்கள் கூடி ஆராயும்

### வவுனியாவில் நாளை முக்கிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகள் குறித்து வடபகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நாளை வவுனியாவில் கூடி ஆராயவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.நவரட்ணம் தெரிவித்தார்.

“தேசிய மீனவர் ஒத்துழைப்பு” என்ற அமைப்பு இச்சந்திப்பை ஒழுங்கு செய்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் மீன்பிடிச் சங்க, சமாச, சம்மேளனப் பிரதிநிதிகளும் தலைவர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். வவுனியாவில் முற்பகல் 11.30 மணியளவில் பொருத்தமான இடம் ஒன்றில் இச்சந்திப்பு நடைபெறவுள்ளது.

இச்சந்திப்பில் முக்கியமாக இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கைகளினால் வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் குறித்து விவாதிக்கப் படவுள்ளன.

அத்துடன், அத்தகைய பாதிப்பை இல்லாது செய்வது தொடர்பாகவும் வடபகுதி மீனவர்களிடையே ஒருமித்த கருத்து எட்டப்படவுள்ளதாகவும் தெரிய வருகிறது. (பா)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கட்டுமண் .1கியூப் - 11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4” கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும். **தொடர்புகளுக்கு:** 0776253719 (R/059)

---

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)

---

### மணமக்கள் தேவை

25,28,32 வயதுடைய ஆண்களுக்கும், 22,25,30 வயதுடைய பெண்களுக்கும் மணமக்கள் தேவை. தொடர்புகளுக்கு:- 0773289577 (C/506)

## மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு நாளை 06ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## திருமறைக் கலாமன்றின் தயாரிப்பில் ‘வானோர் விடுதூது’நாடக ஆற்றுகை

(கொழும்புத்துறை)

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் தயாரிப்பில் “வானோர் விடுதூது” என்னும் நாடக-நடன கலைப் படைப்பு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் மேடை ஏற்றப்படவுள்ளது.

தூது சிற்றிலக்கியத்தின் சாயலைக் கொண்டு இயேசுவின் வாழ்வோடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய நாடக ஆற்றுகையாக வானோர் விடுதூது அமையவுள்ளது.

இந்த நாடகத்திற்கான எழுத்துரு நெறியாள்கையை அருட்திரு நீ.மரியசேவியர் அடிகளாரும், நடன அமைப்பினை திருமதி சுதர்சினி கரண்சனும் மேற்கொண்டுள்ளார்கள்.

ஆர்வலர்களும் அனைவரும் வருகை தந்து கண்டு களிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (52)

## மீன்சந்தை அபிவிருத்திக்கு ஜெய்க்கா நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

ஜெய்க்கா நிறுவனத்தின் நிதியுதவியுடன் யாழ்.மாவட்டத்தில் மீன் கூறுவிலை கோரும் ஐந்து தளங்கள் அமைக்கப்படவுள்ளதாக யாழ்.மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் ஆர்.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

கற்கோவளம், மண்டைதீவு, புங்குடுதீவு, கச்சாய், மறவன்புலவு ஆகிய இடங்களிலேயே மேற்படி மீன் கூறுவிலை கோரும் தளம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான கட்டுமானப் பணிகளை “சேவாலங்கா” நிறுவனம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை, மேலும் கொழும்புத்துறை, ஆதிகோவிலடி, அல்லைப்பிட்டி ஆகிய பகுதிகளிலும் இவ்வாறான மீன் கூறுவிலை கோரும் தளம் அமைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்படி நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டபோதும், அவற்றுடன் அந்தப் பகுதிப் பிரதேசசபைகள் சம்பந்தப்பட்டதன் காரணமாக அத்திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரியவருகிறது. (பா)

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்துரை கனகம்மா



அராலி மத்தி வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை கனகம்மா கடந்த 02.03.2011இல் சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் சிதம்பரம் அவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி நாகலிங்கம் பொன்னுப்பிள்ளை அவர்களின் மருமகளும், காலஞ்சென்ற நாகலிங்கம் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும் மற்றும் கந்தசாமியின் அன்புச் சகோதரியும், சண்முகராசா (ஓய்வுபெற்ற கே.கே.எஸ். சீமெந்து தொழிற்சாலை ஊழியர்), சிங்கராசா (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், அமெரிக்கா), லலிதராணி, வனிதராணி, சந்திரகலா (இலண்டன்), விஜயராணி (ஆசிரியை வட்டு. மத்திய கல்லூரி), செல்வராணி (ஆசிரியை சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலை), கமலராணி (பதிவாளர் பிறப்பு, இறப்பு, திருமணம் வலி.வடக்கு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெயபவானி, வசந்தாதேவி (அமெரிக்கா), பன்னீர்ச்செல்வம், செல்வராசா (வலி.மேற்கு பிரதேசசபை உப அலுவலகம்), இராசலிங்கம் (இலண்டன்), அருள்நேசன் (சமஹன் விற்பனை நிலையம்), சற்குணராசா (தொட்டிலடி), சிவநாதன் (வலி.வடக்கு பிரதேசசபை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீகாந் (ஆசிரியர் பீடம், தினமுரசு வாரமலர்), துஷியந், சொரூபகாந்தி (கொழும்பு), அனோஜன் (பொறியியற்பீடம் இறுதிவருடம் பேராதனைப் பல்கலைக்கழகம்), வெங்கடேசன் (கொழும்பு), யசோதா (மாணவி, யாழ்ப்பாணக் கல்லூரி), சரண்ஜா, பிரசன்னா, பிரியங்கா (இலண்டன்), சாம்பவி (மாணவி அராலி சரஸ்வதி ம.வி.), திலோத்தமன் (மாணவன் யாழ்ப்பாணக் கல்லூரி), மேஷினி (இளவாலை) ஆகியோரின் பாசமிகு பேத்தியாரும், ரஷ்மிகாவின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (05.03.2011) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூணவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

தகவல் :
பிள்ளைகள்.

(C/496)

தர்மம் என்றால் என்ன? சமூகத்தை ஒன்று படுத்த வைக்கும் சக்திதான். துண்டுபடுத்துபவை சமூகத்தை அழிப்பவை. சமூகத்தில் பிரிவினையை உண்டு பண்ணுபவை. எல்லாம் அதர்மமே.

- டாக்டர் இராதாகிருஷ்ணன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
Thinamurasu@live.com
Thinamurasupaper@hotmail.com

# மீள்குடியமர்வின் உண்மை நிலை

உள்நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தைத் தொடர்ந்து சொந்த வாழ்விடங்களை விட்டு வெளியேறிய மக்கள் இப்போது படிப்படியாக மீள்குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் அனைவரும் இன்று நேற்று இடம் பெயர்ந்தவர்கள் அல்லர். அனைவரும், இரண்டு அல்லது மூன்று தசாப்தகாலங்களுக்கு மேலாக சொந்த மண்ணைவிட்டு வெளியேறியவர்களாவர்.

இடம்பெயர்ந்த இம்மக்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல. வெய்யிலில் காய்ந்து, மழையில் நனைந்து ஒரு நேர உணவுக்குக் கூட வழி தெரியாமல் அல்லற்பட்ட இவர்களின் வரலாறு சோகம் நிறைந்ததாகும்.

சொந்த மண்ணில் பல இன்னல்களை இவர்கள் அனுபவித்தபோது அவர்களை நட்டாற்றில் கைவிட்டு கொழும்பிலும், தமிழ் நாட்டிலும், வெளிநாடுகளிலும் தமது குடும்பங்களுடன் தஞ்சம் புகுந்திருந்தவர்கள் 'நாங்களும் உங்களுடன் தான்' என்று பத்திரிகைகளில் முகம்காட்டிவருபவர்கள் மீள்குடியேற்றத்தின் யதார்த்த நிலை பற்றி அறியாது மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவருவதே இவர்களின் வரலாறு.

தாம் சட்டமேதைகள் என்று காட்டிக்கொள்ளும் நோக்குடன் மீள்குடியேற்றத்திற்கு வழக்குத்தாக்கல் செய்த இவர்கள் கண்டபலன் என்ன? காலத்தை இழுத்தடித்து மக்களை ஏமாற்றியது தான் கண்ட மிச்சம்.

இந்நிலையில் யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ள கருத்து இவர்களுக்கு நல்லபொருத்தமாக அமைந்துள்ளது.

மக்களை உடனடியாக மீள்குடியமர்த்துவதற்கு நீதிமன்ற வழக்குத்தாக்கல் எதனையும் பெற்றுத்தராது. அது இழுத்தடிப்பதற்கே வழிவகுக்கும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மக்களை மீள்குடியேற்றம் செய்வதில் அக்கறையுடன் செயற்பட்டுவருவதால் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பிரச்சினைகளை மனம்விட்டுக்கூறினால் புரிந்துணர்வுடன் மீள்குடியமர்வு சாத்தியமானதே. உண்மையும் அதுதான்.

அரச அதிபரின் கருத்துக்கு மேலாக, மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் உள்ள கண்ணி, மிதிவெடிகளை இணங்கண்டு அகற்றுவதற்கு இன்னமும் பத்துவருடங்கள் செல்லும் என்று கண்ணிவெடிஅகற்றும் நிபுணர்கள் கூறியிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

புதைக்கப்பட்டுள்ள வெடிப்பொருட்களை அப்புறப்படுத்தல் அவ்வளவு சுலபமான காரியமல்ல. இதில் ஈடுபட்ட தொழிலாளர்களில் சிலர் அவயவங்களை மட்டுமல்ல உயிரையுமே இழந்துள்ளார்கள்.

இந்நிலையில் உடனடியாக மீள்குடியமர்வு சாத்தியப்படுமா என்பதை மீள்குடியேற்றத்துக்கு ஓலமிடுபவர்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். உணர்ந்துகொள்வார்களா?

மக்களோடு மக்களாக இருந்து அவர்களின் தேவைகளை உணர்ந்து, இனங்கண்டு உரிய தரப்பினருடன் கலந்து பேசி அவற்றைப் பூர்த்தி செய்பவர்களுக்குத்தான் அவர்களின் உண்மை நிலை தெரியும்.

அரசியலில் சுயலாபம் தேட முற்படுபவர்களுக்கு இவை எங்கே தெரியப்போகிறது?

படிப்படியாக நடைபெற்றுவரும் மீள்குடியேற்றத்திற்கு மக்களின் ஒத்துழைப்பு கிடைத்துவருவதினால் அது சுமுகமாக நடைபெற்றுவருவதே உண்மை நிலையாகும்.

-ஆசிரியர்-

# சேந்தாங்குளம் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

சேந்தாங்குளம் சந்தி முதல் மாதகல் துறை வரையிலான கடலோரப் பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும், வலித்தூண்டல் இறங்குதுறைப் பகுதியில் கடற்றொழிலாளர்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதற்கான பகுதியை விஸ்தரிக்கவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைசருமான டக்ளஸ் தேவானந்தா உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அப்பகுதி மக்களின் அழைப்பையேற்று நேற்றைய தினம் சேந்தாங்குளம், இளவாலை, வலித்தூண்டல் ஆகிய பகுதிகளுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் அப்பகுதிகளை ஆராய்ந்ததுடன் பொதுமக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன் பிரகாரம் அப்பகுதிகளைச் சேர்ந்த மக்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இணங்க யாழ்.கடற்படை கட்டளை அதிகாரியுடன் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

இதற்கமைவாக எதிர்வரும் திங்கட்கிழமை 7ஆம் திகதி முதல் சேந்தாங்குளம் சந்தியிலிருந்து மாதகல் துறை வரையிலான கடலோரப் பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

அப்பகுதி சார்ந்த ஏனைய இடங்களில் தற்போது மிதிவெடிகள் அகற்றப்படும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதால் கூடிய விரைவில் அவ்விடங்களிலும் மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சனச அபிவிருத்தி வங்கி இன்று திறப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையில் சனச அபிவிருத்தி வங்கி இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் பருத்தித்துறை வீதி, வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கு அருகில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கிளையை கொழும்பு சனச அபிவிருத்தி வங்கித் தலைவர் கலாநிதி ரி.பி.கிரியந்தில திறந்து வைக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (109)

## சமூர்த்தி அதிகாரசபை மூலமும் உணவுப் பொருட்கள் விற்பனை

(கொழும்பு)

இலங்கை சமூர்த்தி அதிகார சபை சலுகை விலையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்யும் துரித வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளதாக சமூர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் சகல சமூர்த்தித் திணைக்களங்களுக்கும் சுற்றறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

அரிசி மற்றும் மரக்கறி வகைகள், தேங்காய்கள் உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இத்திட்டத்தின் கீழ் விற்பனை செய்யப்படுகின்றன. நாடு பூராகவுமுள்ள சமூர்த்தி மகாசங்கம், சமூர்த்தி வங்கிச் சங்கங்கள் என்பனவற்றினூடாக சமூர்த்திப் பயனாளிகள் குறைந்த வருமானம் பெறுவோரின் உற்பத்திகளை இடைத்தரகர்களின்றி சந்தைக்கு வழங்குவதன் ஊடாக அதிக நன்மைகளை நுகர்வோருக்கு வழங்குவதே இந்த வேலைத்திட்டத்தின் பிரதான நோக்கமென சமூர்த்தி அதிகார சபையின் பணிப்பாளர் ஆர்.பி.பி. திலகசிறி தெரிவித்தார்.

# சர்வதேச செஞ்சிலுவை நிதியுதவியுடன் மருத்துவ சேவை 6 மாதத்திற்கு நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கில் மீள்குடியமர்ந்துள்ள மக்களுக்கென இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினரால் நடத்தப்பட்டு வருகின்ற நடமாடும் மருத்துவ சேவையை மேலும் ஆறு மாதங்களுக்குத் தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிழமையில் மூன்று நாட்கள் மேற்படி பகுதிகளில் நடத்தப்பட்டு வருகின்ற இந்த நடமாடும் மருத்துவ சேவை கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் முதல் நடத்தப்பட்டு வருகின்றது.

சுமார் ஆறுமாதங்கள் கொண்ட இம்மருத்துவ சேவை இம்மாதத்துடன் நிறைவுக்கு வருகின்றமையை அடுத்து இம்மருத்துவ சேவையை மேலும் ஆறு மாதங்களுக்கு நீடித்து வழங்குமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார்.

இப்பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்து மீளவும் இப்பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மக்களின் மருத்துவ சேவையைப் பூர்த்தி செய்வதற்கு இப்பகுதியில் உள்ள வைத்தியசாலைகளை மீளநிர்மாணிக்க வேண்டிய தேவையுள்ளது. அதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அது வரைக்கும் இப்பகுதி மக்களுக்கு இந்நடமாடும் சேவை வழங்கப்பட்டவுள்ளதாகவும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேலும் இந்நடமாடும் மருத்துவ சேவைக்குரிய சகல வகையான செலவுகளுக்குமான நிதி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பா)

## அதிகரித்த கொள்ளைச் சம்பவங்கள் குடாநாட்டில் குறைவடைந்துள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக அதிகரித்திருந்த கொள்ளைச் சம்பவங்கள் தற்போது குறைவடைந்து வருவதாக யாழ்.மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் நெவில் பத்மதேவா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

யாழ்.பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

யாழ்ப்பாணத்தில் இரவு, பகல் வேளைகளில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ரோந்து நடவடிக்கையின் காரணமாகவே குற்றச்செயல்கள் குறைவடைந்துள்ளன. அத்துடன், யாழ்ப்பாண மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக் காரணமாக பல குற்றவாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். விரைவில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் நெவில் பத்மதேவா குறிப்பிட்டார்.

யாழ்.இளைஞர்கள் தங்களது கைத்தொலைபேசிகளில் ஆபாசப் படங்கள் எதனையும் வைத்திருக்க வேண்டாம்.

அவ்வாறு வைத்திருந்தால் சட்டத்தின் பிரகாரம் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். இதனால் அவர்களுடைய பெற்றோர்கள் பிள்ளைகள் குறித்து அக்கறையுடன் செயற்பட வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சங்கானை வர்த்தகர் கைத்தொழில் உரிமையாளர் சங்கப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி புதன்கிழமை பி.ப 3.30 மணிக்குச் சங்கானை நலன் புரிச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சங்கானைப் பிரதேச செயலர் திருமதி பாபு தேவநந்தினி, வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலர் எஸ்.புத்திசிகாமணி, மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, சங்கானைப் பொதுச்சுகாதாரப் பரிசோதகர், சங்கானை மேற்கு ஜே/179 கிராம சேவகர் எஸ்.மகின்ராஜ், சங்கானை தெற்கு ஜே/180 கிராம சேவகர் எஸ்.சர்வானந்தம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் அனைத்து வர்த்தகர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்கச் செயலாளர் கேட்டுள்ளார். (மா)

# துண்டிப் பிரதேசமக்கள் தும்புத் தொழிலை மேற்கொள்ள அமைச்சர் டக்ளஸ் உதவுவார்

## யாழ்.மேயர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

துண்டி பிரதேசத்தில் அமைந்துள்ள கிராமங்களில் மகேந்திரபுரம், எழிலூர் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் ஒரு காலத்தில் வாழ்வாதாரத்தில் மேம்பட்டவர்களாகவும் தமது சுய தொழிலில் ஈடுபட்ட மக்களாகவும் வாழ்ந்து வந்தார்கள் என யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நடைபெற்ற மகேந்திரபுரம் துண்டி எழிலூர், புனிதபுரம், உதயபுரம் ஆகிய கிராமங்களில் மக்களை மீள்குடியேற்றும் நிகழவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடுமையான யுத்தத்தினால் பாதிப்படைந்த எழிலூர், மகேந்திரபுரம் ஆகிய கிராமங்கள் மீளவும் ஒப்படைக்கப்பட்ட போதிலும் துண்டி மிகவும் மோசமான நிலையில் காணப்பட்டது. இந்தப் பகுதியிலிருந்து அப்பாற் செல்ல முடியாத நிலையிலிருந்த பாலங்கள் எம்மால் இனங் காணப்பட்டு அவசரஅவசரமாக புனரமைக்கப்பட்டு 5 பாலங்கள் மாநகர சபையினால் உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துண்டி வீதியில் இருந்து கொய்யாத் தோட்டம் வரையான வீதி எம்மால் சீர்செய் யப்பட்டு 'கெயர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இப்பகுதியில் புராதன வரலாற்று மிக்க துண்டி இந்து மயானம் சீர் செய்வதற்கு அரச அதிபரு டன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கவுள்ளேன்.



இப்பகுதி மக்கள் தங்களது பாரம்பரிய தொழிலான தும்புத் தொழிலை மேற்கொள்வதற்கு அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா உதவுவார். அவரிடம் உங்கள் கோரிக்கைகளை முன்வைப்பதன மூலம் அவற்றை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார் என்று கூறினார். (21)

## சின்னஞ் சிறு செய்திகள்

### பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.ஒஸமானியாக் கல்லூரியில் தலைவர் எம்.யூ.எம் தாஹிர் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடந்த இருமாதமாக மேற்கொள்ளப்பட்ட சேவைகள் பற்றிய அறிக்கையை செயலாளர் அஷ்சேஷ்க் ஐ.அஸ்மின் வெளியிடுவார்.

இக் கூட்டத்தில் அடுத்த இரு மாதத்திற்கான தலைவர் தெரிவு, சம்மேளனத்தின் ஒழுக்க கோவைகள் வெளியிடல், உப குழுக்களை நியமித்தல், மீள்குடியேற்ற செயற்றிட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவைகள் மேற்கொள்ளப் படவுள்ளன. (19)

☆ ☆ ☆

(ஆனைக்கோட்டை)

மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச்சபைக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவா் பா.அப்பாத்துரை தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் சங்கத்தின் தற்போதைய நிலைமை பற்றி ஆராய்ந்து அதனை எவ்வாறு சீர் செய்வது என்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது. (104)

☆ ☆ ☆

(யாழ்.நிருபர்)

காரைநகர் சிவன்கோயில் அடியார்கள் சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை காலை 9.00 மணிக்கு காரைநகர் ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் இ. ஜெயராசா தலைமையில் நடைபெறும்.

நடப்பு ஆண்டிற்கான செயற்குழுத் தெரிவு, 2011 - 2015 வரை யிலான ஐந்து ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கும் திருப்பணிச் செயற்குழுத் தெரிவு என்பன இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(தும்பளை)

யா/கற்கோளம் மெ.மி.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் கா.புஸ்பராசா அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வமராட்சி வலயக் க்ல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக வடமராட்சி திட்டமிடல், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (மா)

### புதிய நிர்வாகிகள்

(பளை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் புதிய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் பேரவை அலுவலகத்தில் நடைபெற்றது. 2011 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகளாகக் கீழ்க்காண்போர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்: சி.சிவப்பிரகாசம்,தலைவர்: அ.கேதீஸ்வரன், உபதலைவர்: செ.மார்க்கண்டு, இணைச் செயலாளர்: க.சண்முகதாஸ்,வே.சுப்பிரமணியம் பொருளாளர்: ச.முரளீதரன். (70)

### நிதி அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒன்பதாம் இலக்க நோயாளர் விடுதியின் அபிவிருத்திக்காக காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தானம ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி விடுதியில் நோயாளர் அமர்ந்திருந்து உணவு உட்கொள்வதற்கு வசதியாக நவீன முறையில் உணவு உட்கொள்ளும் அறை ஒன்றை இந்நிதி உதவியுடன் அமைக்கப்படவுள்ளதாக வியாவில் ஐயனார் தேவஸ்தான அறங்காவலர் க.சோமசேகரம் தெரிவித்துள்ளார். (10)

### தங்கப்பதக்கம் பெற்றார்

(யாழ்.நிருபர்)

அகில இலங்கை ஆசிரியர்களுக்கான விளையாட்டுப்போட்டியில் கலட்டி மெ.மி.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி கருணகலாதேவி குணரட்ணம் மூன்று போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கங்களைப் பெற்றுக் கொண்டார்.இவர் 36-40 வயதுப் பிரிவில் குண்டு போடுதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் ஆகிய மூன்று விளையாட்டு நிகழ்வுகளிலும் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களும் அபிவிருத்தி வாய்ப்புக்களும் என்னும் விடயத்தின் கீழ் சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை கருத்தரங்கு ஒன்றை நடத்தவுள்ளது.

ஆரியகுளம் சந்திக்கு அருகிலுள்ள புதிய உயர் கல்லூரியில் சமூக அரசியல் ஆய்வாளர் அ.சி.உதயகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் துறைசார் வளவாளர்கள், விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

இந்நிகழ்வில் பத்திரிகையாளர்கள் மாணவர்கள், உள்ளூராட்சித் துறையில் பணியாற்றுபவர்கள், ஆர்வலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

## தினமும் மூன்று தடவைகள் படகுச் சேவை

(மணியந்தோட்டம்)

பூநகரிக்கும் மணியந்தோட்டத்திற்கும் இடையிலான பயணிகள் படகுச் சேவை தினமும் மூன்று தடவைகள் நடைபெற்று வருகின்றனர்.

இந்தப் படகில் அரச ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோர் தமது பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கேரதீவு-சங்குப்பிட்டி வீதி திறந்தாலும் கூட பயணிகள படகுச சேவை தொடர்ந்தும் இடமபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (25)

## குழாய் மூலம் குடிநீர்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை துண்டிப் பகுதிக்கு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களின் வசதி கருதி யாழ். மாநகராட்சி மன்றம் குழாய் மூலம் குடிநீரை விநியோகித்து வருகின்றது.

அதனை விட இப்பகுதியில் சேதமடைந்த மதகும் புனரமமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (25)

## அச்சுவேலிப் பகுதியில் ரோந்து நடவடிக்கை தீவிரம்

(அச்சுவேலி)

அச்சுவேலிப் பகுதியில் வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் வாகன விபரம் போன்றவற்றைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

அச்சுவேலி மத்தியகல்லூரியின் முன்புறமாக அமைந்துள்ள தற்காலிக பொலிஸ் சோதனை முகாமில் அவ்வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் நிறுத்தி ஓரப்படுத்தப்பட்டு சாரதியின் சாரதி அனுமதிப் பத்திரம், வாகனத்தின் நடப்பாண்டு வரி அனுமதிப்பத்திரம், செல்லுபடியாகக் கூடிய காப்புறுதிச் சான்றிதழ் ஆகியன பரிசீலிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவதுடன் வாகனங்களில் பயணிப் போரின் எண்ணிக்கையும் பதிவு செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை அச்சுவேலிப் பொலிஸ்நிலையப் போக்குவரத்து பிரிவினர் வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளையும் முடக்கிவிட்டுள்ளனர். (03)

## கட்டடத் திறப்புவிழா

(வடமராட்சி)

வல்வெட்டித்துறையில் புதிதாகக் கட்டப்பட்ட பேருந்து நிலையமும், மீன் சந்தைக் கட்டடமும் இன்று பகல் 10 மணியளவில் வல்வெட்டித் துறை நகராட்சி மன்ற செயலாளர் திருமதி வி.சந்திரயோகன் தலைமையில் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் படவுள்ளது.

இந்நிகழ்வில் பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சிறப்பு விருந்தினராகவும், வடமாகாண சமூக சேவைகள் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.ஜோன்சன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி வ.மதுமதி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (100)

## 50 மாணவர்களுக்கு காலணிகள்

(அச்சுவேலி)


"றிபிள் ஏ" மூவி நிறுவனத்தினரின் அனுசரணையுடன் ஆவரங்கால் ஸ்ரீவிஷ்ணு வித்தியாலய மாணவர்கள் 50 பேருக்கு சுமார் ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியான காலணிகள் வழங்கப்பட்டுள்ளன.

இக் காலணி வழங்கும் வைபவத்தில் நிறுவனப் பணிப்பாளர் செவ்வேளுடன் வடக்கின் வசந்தம் செயற்றிட்ட இணைப்பாளர் திருமதி சுபாஜினி வீரசிங்க அவர்களும் கலந்து மாணவர்களுக்கு காலணிகளை வழங்கியுள்ளனர். இதேவேளை மேலும் ஒரு தொகுதி மாணவர்களுக்கு அடுத்த வாரம் காலணிகள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (03)



கிளிநொச்சி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் மாணவர்களின் அணி வகுப்பையும் பரிசு பெற்ற வீரர்களையும் காணலாம்

# உளநோய்த் தாக்கத்தைப் போக்குவதற்கு ஆற்றுப்படுத்தல் அவசியம் தேவையாகும்



(சண்டிலிப்பாய்)

நாம் கடந்த காலங்களில் இடம்பெற்ற சுனாமி மற்றும் யுதத அனர்த்தங்களுக்குப் பின்பு பல விதமான துன்பகரமான நிகழவுகளைக் கண்டும் கேட்டும் அனுபவித்திருக்கிறோம் என யாழ். மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார்.

கலைத்தூது மண்டபத்தில் நடைபெற்ற 'ஆளுமை மலர உள ஆற்றுப்படுத்தல்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் ஏ.கே.யாவிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இவ்வாறாக நாம் அனுபவித்த துன்பங்களில் ஒன்று மககள் உளநோயின் தாக்கத்திற்கு உட்பட்டுத் துன்பப்படுவது, மற்றையது நோயிலிருந்து மீளமுடியாது அல்லல்படுவது. முன்னர் எமது சமூகம் மனநோயை ஒரு நோயாக ஏறறுக்கொள்ளவில்லை.

வீட்டில் ஒருவருக்கு மனநோய் ஏற்பட்டால் அதனை வெளியில் யாருக்கும் சொல்ல மாட்டார்கள். நோய்க்குச் சிகிசசை பெறவேண்டும், அதற்கான வைத்தியரையோ உள ஆற்றுப் படுத்துநரையோ அணுக வேண டும் என்று எண்ணுவதில்லை.

இன்று எம் மத்தியில் இந்நோய் சர்வசாதாரணமானதாகி விட்டது. கடந்த காலங்களில் இடம்பெற்ற அனர்த்தங்களின் விளைவாகப் பலர் இவ்விதமான நோய்களுக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

இவர்களுக்குச் சிகிச்சை வழங்கவேண்டும். உளவியல் சிகிச்சை அளிப்பது என்பது இலகுவான செயல் அல்ல. ஒருவருடைய கதையை மிக மதிநுட்பத்துடன் கேட்க வேண்டும். அதற்குப் பொறுமை மிக அவசியமானதாகும்.

சுனாமி அனர்த்தத்தின் பின்பு எமது திருச்சபை ஆற்றிய சேவைகளில் ஒன்று உள ஆற்றுப்படுத்தல் ஆகும். திருத்தந்தையர்கள், அருட்செல்விகள் எனப் பலர் இச்சேவையை வழங்கி வருகின்றனர்.

இந்நூலாசிரியர் மிக நீண்ட காலமாக இத்துறையில் ஈடுபட்டு வருபவர். இவர் தனது அனுபவத்தின் மூலம் பெற்ற அறிவு, தனது கல்வியறிவு என்பவற்றின் மூலம் இந்த நூலைச் சிறப்பான முறையில் எழுதியுள்ளார். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன் என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அருட்திரு மரியசேவியர் அடிகளார், அகவொளி நிலைய இயக்குநர் எஸ்.கே.இராஜநாயகம், விரிவுரையாளர் கலாமணி, அருட்திரு றெஜினோல்ட் ஆகியோர் கலந்துகொண்டனர். (54)

## வாழைநாரிலிருந்து உற்பத்திப் பொருட்கள் பயிற்சிக்கு பதிவுகளை மேற்கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் பாரம்பரிய கைத்தொழில் கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அமைச்சின் ஏற்பாட்டில் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வாழைநாரிலிருந்து வீட்டுப் பயன்பாட்டுப் பொருட்கள் கைபபணிப் பொருட்கள் போன்ற பல்வேறுபட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருட்கள், உருவாக்கலுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று மார்ச் மாத நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சியானது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் இந்திய துறை சார்ந்த வனவியலாளர்களால் நான்கு நாட்கள் கொண்ட பயிறசிப் பட்டறையாக நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் தொழில் முயற்சியாளர்கள் தமது பெயர் விபரங்களை மாவட்ட முகாமையாளர், மாவட்டக காரியாலயம், கைத்தொழில் அபிவிருத்திச் சபை, தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடம், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் மார்ச் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (70)

## அலுவலகத் திறப்பு விழா

(பளை)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் அலுவலகத் திறப்பு விழா அண்மையில் பேர வைத் தலைவர் அ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமார் அலுவலகக் கட்டடத்தை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் க.முகுந்தன், பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபைச் செயலாளர் சி.சிவப்பிரகாசம், பேரவை இயக்குநர்சபை உறுப்பினர்கள், பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (70)

## ஆதினியின் இன்றைய பலன்

(05.03.2011 – சனிக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

விகிர்தி மாசி 21
இராகுகாலம் 9.26–10.56,
சுபநேரம் 3.26–4.56,
பிரதமை பி.இ.4.43, பூரட்டாதி,
மரணயோகம் பி.இ.5.19.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

**மேடம்:–** தெய்வ வழிபாடு, பெரியோர் ஆசி, மன மகிழ்ச்சி.

**ரிஷபம்:–** துணிவான முழவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, நினைத்தது நடத்தல்.

**மிதுனம் :–** காரிய சித்தி, மேலாளர் நட்பு, நண்பர் சேர்க்கை.

**கடகம்:–** பொருள் சேர்க்கை, புதிய நட்பு, செய்தியால் மகிழ்ச்சி.

**சிம்மம்:–** பகைவரை மன்னித்தல், ஆலய வழிபாடு, நினைத்த காரியச் சித்தி.

**கன்னி :–** உற்சாக மிகுதி, தொழிலில் உயர்வு, பெரியோர் பாராட்டு.

**துலாம் :–** புகழப்படல், களியாட்ட விருப்பு, மனைவி வழியால் உதவி.

**விருச்சிகம்:–** கற்பனை மிகுதி, நோய் விலகல், நற்செய்தி.

**தனுசு:–** வாகன விபத்து, பொருள் இழப்பு, மனக் குழப்பம்.

**மகரம்:–** வரவுக்குமீறிய செலவு, தெரிழல் நட்டம், பெரியோர் பகை.

**கும்பம் :–** வீண் பிரச்சினை, சினம் அதிகரித்தல், அயலவர் பகை.

**மீனம்:–** தொழில் விருத்தி, பெரியோர் ஆசி, ஆலய வழிபாடு.

## மகளிர் தின நிகழ்வுகள்

(கொக்குவில்)

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனம் இம்முறை உலக மகளிர் தினத்தை எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 'உன்னை வலுப்படுத்து உலகம் வலுப்பெறும்' என்னும் கருப்பொருளை முன்நிறுத்தி விமரிசையாக நடத்துவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு குருநகர் கலாசார மண்டபத்தில் நிறுவன முகாமையாளர் செல்வி ம.பத்மசேகரி தலைமையில் விழா ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக கொழும்பு - கரித்தாஸ், செடெக் உள சமூக மேம்பாட்டுப் பிரிவு தேசிய நிலைய முகாமையாளர் அருட்செல்வி பற்றிமாநாயகியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கியூடெக் - கரித்தாஸ் இயக்குநர் அருட்பணி ஜோ.சே.பேணாட் றெக்னோ அடிகளார் ஆசியுரை நிகழ்த்துவார்.

உலக மகளிர்தின விழாவைச் சிறப்பிக்கும் முகமாக நடாத்தப்படும் சிறுகதை, கவிதைப் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு பரிசில் வழங்கப்படுவதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (68)

◆◆◆

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டுத்துறை விளையாட்டு அமைச்சின் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களமும், யாழ் மாநகராட்சி மன்றமும் இணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகவும், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் இடம்பெறவுள்ள கருத்தாடலில் 'யாழ்ப்பாணக் கலாசாரமும் திருமண முறிவும்' என்னும் விடயம் பற்றிக் கலாநிதி செ.திருநாவுக்கரசு, 'வினைத்திறன் மிக்க பெண்களும் குடும்ப மேம்பாடும்' என்னும் விடயம் பற்றிக் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், 'யாழ்ப்பாணக் கலாசார விழுமியங்களில் பெண்கள்' என்னும் விடயம் பற்றி சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து 'தூக்கி எறியப்படாத கேள்வியாய்' என்னும் தலைப்பில் வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளும், 'பெண்ணின் பெருமை' என்னும் தலைப்பில் வலிகாமம் மேற்கு கலாசார பேரவையும் நாடகங்களை வழங்கவுள்ளன.

மற்றும் அணிசேர் கலைஞர்களின் இன்னிசையரங்கும் இடம்பெறவுள்ளது.

## சுழல் வெற்றிக் கேடயம் அன்பளிப்பு

(யாழ்.நிருபர்)

இன்று சனிக்கிழமை நடைபெறும் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியை முன்னிட்டு காரை விளையாட்டுக்கழகம் 87,000 ரூபா பெறுமதியான சுழல் வெற்றிக் கேடயங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டு விளையாட்டுத்துறை மேம்பாட்டிற்காக உழைத்து அமரர்களான விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் முகமாகவும் புதிய வீரர்களை உருவாக்குவதையும், வளர்ப்பதையும் நோக்கமாகக் கொண்டு இக்கேடயங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி 18 சுழல் வெற்றிக் கேடயங்களையும் 23 வெற்றிக் கிண்ணங்களையும் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அவ்வேளை காரை விளையாட்டுக் கழகச் செயலாளரும் முன்னாள் உதைபந்தாட்ட வீரருமான எஸ்.கே.சதாசிவம், கல்லூரி அதிபர் பொ.சிவானந்தராஜாவிடம் இவ் வெற்றிக் கேடயங்களைக் கையளித்துள்ளார்.(10)



கைதடி நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நிகழ்வில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும், விளையாட்டு நிகழ்வையும் காணலாம்.

# இந்தியாவையும் வீத்துவோம்




(பெங்களூர்)

இங்கிலாந்தைப் போன்று இந்திய அணியையும் வீழ்த்துவோம் என அயர்லாந்து அதிரடி வீரர் கவின் ஓ பிரையன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்கிலாந்தை வெற்றி கொண்ட மகிழ்ச்சி இன்னும் எங்களை விட்டு அகலவில்லை. இதே வெற்றியை இனி வரும் போட்டிகளிலும் பெறவேண்டும் என்ற முனைப்போடு இருக்கிறோம். இந்தியாவுடன் மோதும் ஆட்டம் எங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும். இந்தியாவையும் எங்களால் வீழ்த்த முடியும். எங்களுடைய பந்து வீச்சும் நன்றாக உள்ளது. இதனால் தான் பங்களாதேஷைக் கட்டுப்படுத்தினோம். இங்கிலாந்தை வீழ்த்தினோம்.

இதே மாதிரி எங்கள் ஆட்டம் தொடர்ந்தால் இந்தியாவுக்கும் நெருக்கடி கொடுக்க முடியும். சேவாக் போன்ற சில வீரர்கள்தான் எங்களுக்குப் பிரச்சினை. தொடக்கத்திலேயே சில விக்கெட்டுகளை வீழ்த்தி இந்தியாவுக்கு நெருக்கடி கொடுக்க வேண்டும் என திட்டமிட்டுள்ளோம். நாங்கள் கடந்த உலகக் கிண்ணப் போட்டியிலும் நன்றாகத்தான் ஆடினோம். அதேபோல 20 ஓவர் சம்பியன் போட்டியிலும் சிறப்பாக ஆடினோம். இப்போது எந்த அணியையும் வீழ்த்தக்கூடிய அளவுக்கு வலிமையாக மாறி இருக்கிறோம்.

இங்கிலாந்துடன் நடந்த போட்டியில் நாங்கள் வெற்றி பெற இந்திய ரசிகர்களின் ஆதரவும் முக்கிய காரணமாக இருந்தது. இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தின் போதும் இந்திய ரசிகர்கள் எங்களுக்கு ஆதரவாக இருப்பார்கள் என நம்புகிறோம்.

என்னை பொறுத்தவரை கிரிக்கெட் மட்டுமல்ல, இங்கிலாந்துக்கு எதிராக எந்த ஒரு போட்டியில் வெற்றி பெற்றாலும் அது ஒரு மிகப்பெரிய மகிழ்ச்சியான நிகழ்வு தான். இந்த இனிங்சை எனது சிறந்த ஆட்டமாகக் கொன்வேன் என்றார்.

# கைநழுவிய வெற்றி வாய்ப்பு காரணம் கூறுகிறார் ஸ்ரோஸ்

(புதுடில்லி)



கெவின் ஓ பிரையனின் பிடியை நான் நழுவ விட்டேன். அதனால் தான் வெற்றி கையை விட்டுப் போய் விட்டது என இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோஸ் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தத் தோல்வியால் அதிர்ச்சி அடைந்துள்ளோம். மீண்டும் ஒரு மோசமான களத்தடுப்பு வேதனையும், ஏமாற்றமும் அளிக்கிறது. களத்தடுப்பில் நாங்கள் நல்லவிதமாக செயற்பட்டோம். இதே போல் பந்து வீச்சில் தொடக்கத்தில் எங்களது பணி சிறப்பாகவே இருந்தது. 111 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை வீழ்த்தி விட்டோம். ஆனால் இந்த உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் எங்களது களத்தடுப்பு தொடர்ந்து மோசமாக இருந்து வருகிறது. இந்த ஆட்டத்திலும் நான்கு பிடிகளைத் தவற விட்டு விட்டோம். அதில் கெவின் ஓ பிரையனின் பிடியை நான் நழுவ விட்டேன். அதனால் தான் வெற்றி கையை விட்டுப் போய் விட்டது. ஒரு துடுப்பாட்ட வீரரின் பிடி வாய்ப்பை வீணடித்து விட்டால், அதன் பிறகு அவரது விக்கெட்டை வீழ்த்துவது கடினம். கெவின் ஓ பிரையனிடம் இருந்து இப்படியொரு ஆட்டத்தை நாங்கள் எதிர்பார்க்கவில்லை. துடுப்பாட்ட பவர் பிளேயை சரியாக பயன்படுத்திக் கொண்டார்.

இந்த வெற்றிக்கு அயர்லாந்து தகுதியான அணி. இந்தத் தோல்வியால் எங்களது உலகக் கிண்ணப் போட்டித் தொடர் கனவு முடிந்து விடவில்லை. அடுத்து தென்னாபிரிக்காவுக்கு எதிராக மிகப்பெரிய ஆட்டத்தைச் சந்திக்கிறோம். பொதுவாக நாங்கள் கடந்த காலங்களில் தோல்வியில் இருந்து சிறப்பாக மீண்டு வந்திருக்கிறோம் என்றார்.

# குவியும் வாழ்த்துக்கள்



(பெங்களூர்)

இங்கிலாந்து அணியை செக்க வைத்த அயர்லாந்து அணிக்கு அந்த நாட்டில் இருந்து வாழ்த்துகள் குவிந்து வருகின்றன. அது மட்டுமின்றி அந்த அணியின் ஸ்பொன்சரான ஆர்.எஸ்.ஏ. இன்சூரன்ஸ் நிறுவனம், உலகக் கிண்ணத் தொடர் ஆரம்பமாவதற்கு முன்பே லீக் சுற்றில் சிறப்பாகச் செயற்பட்டால் சிறப்பு போனஸ் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தது.

அந்த உறுதிமொழிப்படி அயர்லாந்து வீரர்களுக்கு மொத்தம் ரூ.63 இலட்சம் போனசாகக் கிடைக்க உள்ளது. இந்தத் தொகை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்களுக்கு சரிசமமாகப் பகிர்ந்தளிக்கப்படும். தனிப்பட்ட வீரர்களுக்கு சிறப்பு பரிசு வழங்கும் திட்டம் இல்லை, அயர்லாந்து காலிறுதிக்கு முன்னேறினால் இன்னொரு போனஸ் காத்திருக்கிறது என்றும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

# பலவீனமான பந்துவீச்சு அம்பலம்


(கராச்சி)

இந்திய அணி பலவீனமான பந்துவீச்சாளர்களைக் கொண்டுள்ளது அம்பலமாகிவிட்டது என்று பாகிஸ்தான் முன்னாள் தலைவர் இம்ரான்கான் தெரிவித்தார்.

பங்களாதேஷ் அணிக்கு எதிரான ஆட்டத்திலேயே இந்திய அணியின் மோசமான பந்துவீச்சு அம்பலமாகிவிட்டது.





அவர்களுக்கு இப்போது பிரச்சினையே பந்துவீச்சுத்தான். திறமையான பந்துவீச்சாளர்கள் இருந்தால்தான் இறுதிச்சுற்றுக்கு முன்னேற முடியும். எனவே ஐந்து பந்துவீச்சாளர்களுடன் களமிறங்கினால் மட்டுமே எதிரணிகளுக்கு சவால் அளிக்க முடியும் என்றார்.



இதேவேளை, லசித் மலிங்க குறித்து கருத்துத் தெரிவித்த இம்ரான்கான், அவர் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தியதால் கிரிக்கெட் வல்லுநர்களின் பார்வையில் இருந்து தப்பிவிட முடியாது. அவர் பந்துவீசும் முறை வழக்கத்துக்கு மாறானது. அக்தர், பிரெட் லீ ஆகியோரே மிகச் சரியாகப் பந்து வீசக் கூடியவர்கள் என்றார்.

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011




முதல் இரண்டு ஆட்டங்களிலும் உபாதை காரணமாக விளையாட முடியாமற்போன இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் இலங்கையின் மூன்றாவது ஆட்டத்தில் களமிறங்கி HAT TRICK சாதனை புரிந்தார். இந்த ஹட்ரிக் சாதனை பற்றி பின்னர் பேசும்போது இவ்வளவு திறமையான முறையில் YORKER பந்து வீச்சு நுட்பத்துக்கு யார் காரணம் என்றும் எடுத்துக் கூறினார். அதாவது பாகிஸ்தான் முன்னாள் நட்சத்திரங்கள் வாசிம் அக்ரம் மற்றும் வக்கார் யூனிஸ் இருவரும் வீசும் யோக்கர் பந்துவீச்சைப் பார்த்துத்தான் தான் கற்றுக் கொண்டதாக மிகப் பெருமையாகக் கூறியிருந்தார்.

இந்த விடயம் இப்பொழுது இந்த இரு ஜாம்பவான்களின் காதுகளில் விழ, இருவரையும் லசித் மலிங்க Touch பண்ணிவிட்டதாக மிகவும் மகிழ்ச்சியுடன் கூறியிருக் கிறார்கள்.

தற்பொழுது நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் பாகிஸ்தான் அணியின் பயிற்றுநராக வக்கார் யூனிசும், தொலைக்காட்சி வர்ணனையாளர் வசீம் அக்ரமும் களத்திலேயே நிற்கிறார்கள். வசீம் அக்ரம் மலிங்கவின் கருத்துப் பற்றிக் கூறுகையில், உலகின் முதல் தரமான பந்து வீச்சாளரின் இந்த வார்த்தைகளை எனக்குக் கிடைத்த பெரும் வெகுமதியாகக் கருதுகிறேன் என்று கூறியுள்ளார். மேலும் இவரின் பந்து வீசும் பாணியே அலாதியானது. அதோடு இவர் மிகவும் புத்திசாலியான பந்து வீச்சாளரும் கூட. இதுவே துடுப்பாட்ட வீரர்களைப் பதற வைக்கிறது. மேலும் Yorker பந்து வீச்சு ஒரு விஷேட திறமை. இவரது இளமையும் போராடும் குணமும் இன்னுல் பல படிகளை இவருடைய கிரிக்கெட் எதிர்காலத்தில் இலகுவாகத் தாண்டி சாதனை படைக்க உதவும் என்று மனமாரப் பாராட்டியுள்ளார்.

இதேவேளை, வக்கார் யூனிஸ் தன்னைப் பற்றி லசித் கருத்துத் தெரிவித்தமை பற்றிக் கூறும் போது, கென்யா கடினமானதொரு அணி அல்ல என்றாலும் லசித் எப்போதும் நேராகவும், கால்களைத் துல்லியமாகக் குறி வைத்தும் பந்து வீசினார்.

அதோடு வக்கார் யோக்கர் பந்து வீச்சில் கில்லாடி. TOE CRUSHING YORKER என்றால் இவருக்கு இனிப்புச் சாப்பிடுவது போல. இவர் தொடர்ந்து கூறும்போது லசித் மலிங்கவின் பந்து வீச்சைப் பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்து. என்னைப் பாராட்டியமைக்கு லசித்துக்கு நன்றி என்றும் கூறியிருக்கிறார்.

லசித் மலிங்கவின் அதிர்ஸ்டம் தன் ஆதர்ஷ புருஷர்கள் இருவரும் களத்திலேயே நிற்பதுதான். எந்தப் பந்தாவும் இல்லாமல் தன் மனதில் பதிந்ததை அடிப்பயே கூறியதன் மூலம் லசித், வக்கார், வசீம் இருவர் மட்டிலும் அல்ல, கிரிக்கெட் ரசிகர்கள் அத்தனை பேர் மனதில் இன்னும் அதிக மரியாதைக்கு உரியவர் ஆகி விட்டார். லசித் மலிங்க ஒரு புன்னகை மன்னன். அதேவேளை, MERCY KILLER


ஜோசப் கிருஷ்ணா

### தினமொரு தகவல்

ICC Cricket World Cup 2011

# கனடா வீரர்களின் சுயவிபரம்

(கொழும்பு)




கனடா அணி முழுக்க முழுக்க சொந்த நாட்டு வீரர்கள் மட்டுமே கொண்ட அணியல்ல. பல நாட்டு வீரர்கள் அடங்கிய அணி கனடா. பாகிஸ்தான் அணியுடனான போட்டியில் களம் இறங்கிய 11 கனடா வீரர்களின் சுயவிபரத்தைப் புரட்டிப் பார்த்தால், 7 நாட்டு வீரர்கள் இடம் பெற்றிருப்பது தெரிய வரும். 2 விக்கெட் கைப்பற்றிய சுழற் பந்து வீச்சாளர் பாலாஜி ராவ் சென்னையைச் சேர்ந்தவர். தலைவர் பகாய் டில்லியில் பிறந்தவர். 3 விக்கெட்டுகளைச் சாய்த்த ஹர்விர் பைத்வான், ஹன்ஸ்ரா ஆகியோர் இந்தியர்கள். இது தவிர பாகிஸ்தான், இலங்கை, உகண்டா, மேற்கிந்தியத்தீவு, அமெரிக்கா ஆகிய நாட்டில் பிறந்தவர்களும் இவ்வணியில் இடம் பெற்றுள்ளனர்.

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்திய மற்றும் அயர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டியில் ஆட்டநாயகனாகும் வீரர் யார்?

பெயர்: ..........

முகவரி : ..........

போ.இல : ..........

விடைகள் : 01) ..........

02) ..........

**போட்டி இல: 16**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விரைவில் அறிவிக்கப்படும்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| | |
|---|---|
| தினமுரசு காரியாலயம் 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். | தினமுரசு விளம்பரப் பணிமனை M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |

விடைகளை 07 ஆம் திகதி 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.

## தினமுரசு மே.தீவுகள் எதிர் பங்களாதேஷ் SCORE CARD

மைதானம் : டாக்கா. திகதி : 04-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி பங்களாதேஷ் : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தமீம் இக்பால் | c சமி b றோச் | 00 |
| 02) இம்னுஸ் கைஸ் | c தோமஸ் b சமி | 05 |
| 03) ஜூனெய்ட் சித்திக் | lbw b றோச் | 25 |
| 04) முஸ்டிகுர் ரகீம் | c சர்வான் b சமி | 00 |
| 05) ஷாகிப் அல் ஹசன் | b பென் | 08 |
| 06) ராகிபுல் ஹசன் | c பொலாட் b சமி | 04 |
| 07) மொகமட் அஷ்ரபுல் | c தோமஸ் b றோச் | 11 |
| 08) நயீம் இஸ்லாம் | c தோமஸ் b பென் | 01 |
| 09) சரீம் இஸ்லாம் | c பொலாட் b பென் | 00 |
| 10) அப்துர் ரசாக் | not out | 02 |
| 11) ரூபில் கொசெய்ன் | b பென் | 00 |
| உதிரிகள் | (w 1, nb 1) | 02 |
| மொத்தம் | (all out : 18.5 ஓவர்கள்) | 58 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) டியொன் ஸ்மித் | b நயீம் இஸ்லாம் | 06 |
| 02) கிறிஸ் கெய்ல் | not out | 37 |
| 03) டி.எம். பிராவோ | not out | 09 |
| 04) சர்வான் | | |
| 05) சந்தர்போல் | | |
| 06) கே. எம். பொலாட் | | |
| 07) டி.எம். தோமஸ் | | |
| 08) டரன் சமி | | |
| 09) நிகிட்டா மில்லர் | | |
| 10) எஸ்.ஜே. பென் | | |
| 11) கெமர் றோச் | | |
| | (b 2, w 5) | 07 |
| மொத்தம் | (1 w 12.2 ஓவர்கள்) | 59 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| கெமர் றோச் | 06 | 19 | 03 |
| எஸ். ஜே. பென் | 5.5 | 18 | 04 |
| டரன் சமி | 07 | 21 | 03 |
| | | | |
| | | | |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| சரீப் இஸ்லாம் | 02 | 11 | 00 |
| நயீம் இஸ்லாம் | 06 | 14 | 01 |
| ராகிபுல் ஹசன் | 01 | 12 | 00 |
| அப்துர் ரசாக் | 01 | 08 | 00 |
| மொகமட் அஷ்ரபுல் | 02 | 11 | 00 |

**09 விக்கெட்டுக்களால் மே.தீவுகள் அணி வெற்றி. ஆட்டநாயகன் : றோச்**

## மே.தீவுகள் இலகு வெற்றி


பங்களாதேஷ் அணிக்கெதிரான போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இலகுவான வெற்றி பெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 19ஆவது போட்டியாக மேற்படி அணிகளுக்கு டாக்கா மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு விக்கெட்டை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக றோச் தெரிவானார்.






ICC Cricket World Cup 2011

### இன்றைய ஆட்டம்

இலங்கை எதிர் அவுஸ்ரேலியா

மைதானம் : கொழும்பு

பகலிரவு ஆட்டம்



## நியூசிலாந்து வெற்றி

சிம்பாப்வே அணிக்கெதிரான போட்டியில் நியூசிலாந்து அணி பத்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 18ஆவது போட்டி நேற்று அஹமதாபாத் மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் ஆடிய சிம்பாப்வே அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு ஆடிய நியூசிலாந்து அணி விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கை அடைந்தது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக குப்ரில் தெரிவானார்.



## தினமுரசு நியூசிலாந்து எதிர் சிம்பாப்வே SCORE CARD

மைதானம் : அஹமதாபாத். திகதி : 04-03-2011 ICC Cricket World Cup 2011

நாணயச் சுழற்சி வெற்றி சிம்பாப்வே : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ரெய்லர் | lbw b ஸ்ரைரிஸ் | 44 |
| 02) கோவென்றி | run out பென்னட் | 00 |
| 03) தைபு | lbw b சவுத்தி | 08 |
| 04) எர்வின் | c ரைடர் b மில்ஸ் | 11 |
| 05) சிக்கும்புறா | lbw b விட்டோரி | 01 |
| 06) ஷங்ஹவா | c ரெய்லர் b விட்டோரி | 00 |
| 07) லம்ப் | run out குப்ரில்/விட்டோரி | 18 |
| 08) உட்சயா | b சவுத்தி | 36 |
| 09) கிறிமர் | c பி.மக்கலம் b மில்ஸ் | 22 |
| 10) பிறைஸ் | lbw b சவுத்தி | 11 |
| 11) பென்யன்ஹாறா | not out | 04 |
| உதிரிகள் | (lb 4, w 3) | 07 |
| மொத்தம் | (all out : 46.2 ஓவர்கள்) | 162 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) எம். கே. குப்ரில் | not out | 86 |
| 02) பிரென்டன் மக்கலம் | not out | 76 |
| 03) ஜெசி ரைடர் | | |
| 04) ரொஸ் ரெய்லர் | | |
| 05) ப்ரைங்கிளின் | | |
| 06) ஸ்கொட் ஸ்ரைரிஸ் | | |
| 07) நேதன் மக்கலம் | | |
| 08) விட்டோரி | | |
| 09) கைல் மில்ஸ் | | |
| 10) ரீம் சவுத்தி | | |
| 11) கேர்மிஷ் பென்னட் | | |
| உதிரிகள் | (lb1, w 1, nb2) | 04 |
| மொத்தம் | (0 w. 33.3 ஓவர்கள்) | 166 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| கே. டி. மில்ஸ் | 10 | 29 | 02 |
| ரிம் சவுத்தி | 9.2 | 29 | 03 |
| ஷேர்மிஷ் பென்னட் | 08 | 37 | 00 |
| விட்டோரி | 10 | 25 | 02 |
| ஸ்கொட் ஸ்ரைரிஸ் | 04 | 13 | 01 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பெனியன்ஹாறா | 5.3 | 42 | 00 |
| பிறைஸ் | 07 | 23 | 00 |
| உட்சயா | 06 | 23 | 00 |
| லம்ப் | 05 | 18 | 00 |
| கிறீமர் | 07 | 38 | 00 |

**10 விக்கெட்டுக்களால் நியூசிலாந்து அணி வெற்றி. ஆட்டநாயகன் : குப்ரில்**

அனுசரணையாளர்:
சுந்தர்சன்
மின்சார உபகரணங்கள், நீர் வழங்கும் PVC குழாய்கள் அதன் இணைப்புக்கள், அதி நவீன அலங்கார லைற் வகைகள், சுவர் லைற்றுக்கள், மின் விசிறிகள், குளிரூட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இந்திரங்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், மனங்கவர் பரிசுப் பொருட்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள தனி ஒரே இடம்
ICC Cricket World Cup 2011
SUNDHARSON
யாழ். வீதி, மானிப்பாய். T.P. 021 225 5136
(C/489)

# மீனவர் தாக்கப்படுவதனை தடுக்குமாறு மனுத்தாக்கல்

(புதுடில்லி)

தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதனைத் தடுக்க வேண்டுமெனக் கோரி தேசிய மனித உரிமை ஆணைக்குழுவிடம் மனுச் செய்யப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் அகில இந்தியத் தலைவர் நிதின் கட்காரி, தமிழகத் தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் டெல்லியில் தேசிய மனித உரிமைகள் கமிஷனின் தலைவர் நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணனைச் சந்தித்துப் பேசினார்கள்.

அப்போது, இலங்கைக் கடற படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதும், சுட்டுக் கொல்லப்படுவதும் மனித உரிமையை மீறிய செயல் என்றும், இதை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரி மனு ஒன்றைக் கொடுத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய நிதின் கட் காரியும், பொன். ராதாகிருஷ்ணனும்,

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்குவதும், சுட்டுக் கொல்வதும் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. இது மனித உரிமைகளை மீறும் செயல் ஆகும். இந்தச் சம்பவங்கள் கவலை அளிக்கின்றன.

ஆனால், இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதை தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகள் தவறி விட்டன.

எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய, மாநில அரசுகளிடம் வலியுறுத்த வேண்டும் என்று மனித உரிமை கமிஷன் தலைவரிடம் கேட்டுக் கொண்டோம்.

தமிழக மீனவர்கள் கொல்லப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும். இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காணவேண்டும் என்றனர்.




# கடமையைச் செய்யத் தவறும் இந்திய கடலோர காவற்படை

## ராஜா குற்றச்சாட்டு


இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதில் இந்திய கடலோர காவற்படை தனது கடமையைச் செய்யத் தவறுகிறது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி. ராஜா குற்றம் சாட்டினார்.

இதுகுறித்து மாநிலங்களவையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் டி.ராஜா பேசுகையில் -

எத்தனையோ முறை இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர். நமது மீனவர்களின் படகுகள் அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன. மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இதில் வேடிக்கை எனன வென்றால், அத்தகைய சம்பவங்கள் நடந்த இடங்களில் ஒருமுறை கூட இந்திய கடலோர காவல் படையினர் இருந்ததில்லை.

நமது கடற்பரப்பில் பதற்றமான பகுதிகள் எவை என்பது நமது கடலோர காவற்படைக்கு நிச்சயம் தெரிந்திருக்கும். எனவே, பதற்றமான பகுதிகளில் முகாமிட்டு, இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களிலிருந்து நமது மீனவர்களைப் பாதுகாக்க வேண்டியது கடலோர காவற்படையினரின் கடமை என்றார்.

# தேர்தல் திகதியை மாற்ற முடியாது



தமிழகத்தில் தேர்தல் திகதியை மாற்ற இயலாது என, தலைமைத் தேர்தல் ஆணையாளர் குரேஷி கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறியுள்ளதாவது- 5 மாநிலங்களிலும் தேர்வு, திருவிழாக்களைப் பரிசீலித்து திகதி முடிவு செய்யப்பட்டுள்ளது. தேர்தல் திகதியை மாற்றக்கோரி தமிழ்நாட்டில் அ.தி.மு.கவிடம் இருந்து மட்டுமே கடிதம் வந்தது. அதில் மாணவர்கள் படிப்பதால் வேட்பாளர்கள் அதிக ஓசையின்றி பிரசாரம் செய்யவேண்டும் என்றிருந்தது.

# ராசா மீதான நீதிமன்றக் காவல் 17 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது

(சென்னை)

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு தொடர்பான வழக்கில் அமைச்சர் ஆ.இராசா உள்ளிட்ட 4 பேரின் நீதிமன்றக் காவலை மார்ச் 17ஆம் திகதி வரை டெல்லி ம.பு.க. சிறப்பு நீதிமன்றம் நீடித்துள்ளது.

இராசா, தொலைத் தொடர்புத்துறை முன்னாள் செயலர் சித்தார்த் பெஹுரியா, இராசாவின் தனிச் செயலராக இருந்த ஆர்.கே.சந்தோலியா, ஸ்வான் ரெலிக்கொம் நிறுவனத்தின் உரிமையாளர் ரிஷத் உஸ்மான் பால்வா ஆகியோரை மத்திய புலனாய்வுக் கழக அதிகாரி முன்னிலையில டெல்லியில் உள்ள ம.பு.க. சிறப்பு நீதிமன்றத்தில் நிறுத்தினர்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு தொடர்பான வழக்கில் இன்னமும் தங்களின் புலனாய்வு நிறைவு பெறவில்லை என்றும், எனவே இராசா உள்ளிட்ட 4 பேரின் நீதிமன்றக் காவலை நீடிக்க வேண்டும் என்றும் ம.பு.க.தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி ஒ.பி.சைனி,



அவர்களின் காவலை மார்ச் 17 ஆம் திகதி வரை நீடிப்பதாக உத்தரவிட்டார்.




## தினமுரசின் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர்: நா. தனுஸ்கா
முகவரி: 3ம் ஒழுங்கை, கட்டைக்காடு, பெரியகுளம்

நான்காவது அகவையில்



பெயர்: த.பிரணவி
முகவரி: கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..............................
முகவரி : ..............................
பிறந்த ஆண்டு : ..............................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

.............................. பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



# கூறுவிலை கோரல் அறிவித்தல்

## மாநகரசபை, யாழ்ப்பாணம்.

**மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட வீதி மற்றும் கட்டட வேலைகளுக்குத் தேவையான வீதி உருளை, மாட்டு உருளை, பக்கோ (JBC Bacow) ஆகிய இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. இவற்றினை வாடகைக்கு வழங்கும் நிறுவனங்கள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கலாம். இக்கூறுவிலைகள் யாவும் 16.03.2011 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னராகவோ எம்மால் கோரப்பட்டமைக்கு அமைவாக தங்களால் படிவம் தயாரிக்கப்பட்டு, கடித உறையின் இடது மேல் பக்கத்தில் Po/2011 வீதி உருளை, பக்கோ வாடகைக்கு அமர்த்தல், எனக் குறிப்பிட்டு முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

### விபரம் வருமாறு:-

**1. வீதி உருளை வாடகைக்கு அமர்த்துதல்**

I. 10 தொன் நிறையுடைய வீதி உருளை 1 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட).

II. 10 தொன் நிறையுடைய வீதி உருளை ஒரு நாளுக்கு 8 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட).

III. மாட்டு உருளை 1 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (செலவு உட்பட)

IV. மாட்டு உருளை ஒரு நாளுக்கு 8 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (செலவு உட்பட)

**2. பக்கோ இயந்திரம் (JBC Bacow) வாடகைக்கு அமர்த்துதல்**

I. 1 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட) 60 Hp, 120 Hp, 200 Hp

II. ஒரு நாளுக்கு 8 மணித்தியாலத்திற்கு சேவையில் ஈடுபடுத்துவதற்கான கூறுவிலை (சாரதி, எரிபொருள் செலவு உட்பட) 60 Hp, 120 Hp, 200 Hp


மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
04.03.2011

(C/498)

திருமதி யோ. பற்குணராசா
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

# விலை உயர்வுக்கு எதிராகப் போராடுவோர் அதற்கான தீர்வை ஏன் முன்வைப்பதில்லை

## கேள்வியெழுப்புகிறார் அமைச்சர் வாசுதேவ



(கொழும்பு)

விலைவாசி உயர்வைக் கண்டித்து எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வருகின்றன. ஆனால் அதற்கான தீர்வுத் திட்டத்தை அவை முன்வைப்பதில்லை. இவ்வாறு தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறுகையில்,

பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றமை, வாழ்க்கைச் செலவு உயர்வடைகின்றமை ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்டங்கள் நடத்துகின்றன. அதற்கான வழிமுறைகள் என்ன?

விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்வுத்திட்டம் என்ன என்று ஆர்ப்பாட்டம் நடத்துகிறவர்கள் அரசுக்குக் கூறத் தவறுகின்றனர். எனவே எதிர்க்கட்சிகளின் இவ்வாறான நடவடிக்கைகள் தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்கும் அரசியல் இலாபம் அடைவதற்கும் ஆகும். கடந்தகாலத் தேர்தல்களின்போது எதிர்க்கட்சிகள் இப்படியான ஆர்ப்பாட்டங்களைச் செய்தன. ஆனால் மக்களின் சுயசிந்தனைக்கு முன்பாக அவர்கள் தோற்றுப்போனார்கள். எதிர்க்கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரசு தற்போது முகங்கொடுக்க முடியாத பிரச்சினைகளில் சிக்கியுள்ளது. மக்களும் பல்வேறு நெருக்கடிகளில் சிக்கியுள்ளனர். இவைகளே நமக்கு வாய்ப்புகளை அதிகரித்துள்ளன என்று கூறியுள்ளார். எனவே மக்கள் இன்று தெளிவாக இவர்களைப் பற்றிப் புரிந்துகொண்டுள்ளனர் என்றார்.

# ஐ.நா செயலர் அமைத்த நிபுணர்குழு சாட்சியப் பதிவை நிறைவு செய்தது

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகத் தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான்-கீ-மூன் நியமித்த நிபுணர்கள் குழு, தமது அறிக்கையை தயாரிப்பதற்கான சாட்சியப் பதிவுகளை நிறைவு செய்துள்ளது.

இதனடிப்படையில், நிபுணர்கள் குழுவின் இறுதியறிக்கை அடுத்த சில தினங்களில் ஐ.நா செயலாளரிடம் கையளிக்கப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 28 ஆம் திகதி நிபுணர்கள் குழுவின் கடமைகள் நிறைவடைந்தன. எனினும் நிபுணர்கள் குழுவின் பணிக்காலம் நீடிக்கப்படவில்லை.

இந்த நிலையில், நிபுணர்கள் குழுவின் அறிக்கையை ஊடகங்களுக்கு வெளியிடுவது தொடர்பில் இதுவரை தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

பான்-கீ-மூனிடம் அறிக்கை கிடைத்ததும் அதனை ஊடகங்களுக்கு வெளியிடுவதா இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. நிபுணர்கள் குழு தனது சாட்சியப் பதிவுகளை முடித்துள்ள நிலையில், அந்தக் குழுவுக்கும், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவிற்கும் இடையிலான சந்திப்புக் குறித்தும் இதுவரை உறுதியான அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை.

# முன்னாள் கடற்படைத் தளபதியை தூதுவராக நியமிப்பதற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதியை நியமிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கடுமையாக எதிர்த்துள்ளார்.

தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோன் முர்பி அவுஸ்ரேலியா நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது, இலங்கையின் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசார சமரசிங்கவை தூதுவராக நியமிக்கும் முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார்.

இலங்கையில் வாழும் சமூகத்தின் சார்பில் குறிப்பாக தமிழ்ச் சமூகத்தின் சார்பாக அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக முன்னாள் கடற்படைத் தளபதியை நியமிக்க எடுக்கப்படும் முயற்சிகள் குறித்து ஆழ்ந்த கவலையடைகிறேன்.

தமிழர் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரும் படை நடவடிக்கையின் போது பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்ட போது இலங்கை கடற்படையின் நடவடிக்கைத் தளபதியாக இருந்தவரை, அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக நியமிக்கும் முயற்சி எம்மையெல்லாம் கவலை கொள்ள வைத்துள்ளது.

அவுஸ்ரேலியாவுக்கான தூதுவராக நியமிக்கப்படுவதற்கு இவர் முற்றிலும் பொருத்தமற்ற ஒருவர்.

அத்துடன் போரின் இறுதி நாட்களில் புலிகளின் சரணடைதலுடன் தொடர்புபட்டிருந்த அவுஸ்ரேலிய - இலங்கை இரட்டைக்குடியுரிமை பெற்ற பாலித கோஹன்ன மீது சுதந்திர விசாரணையை அவுஸ்ரேலிய அரசாங்கம் நடத்த வேண்டும்.

2009 மே 18ஆம் திகதி வெள்ளைக்கொடியுடன் சரணடையச் சென்ற பல அப்பாவிப் பொதுமக்கள் கோரமான முறையில் கொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் இலங்கையில் தமிழர்கள் நல்ல நிலையில் வாழ்வதற்கு அவுஸ்ரேலியா உதவ வேண்டும் என்றும் கோருகிறேன்". என்று அவர் மேலும் நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

# 41 முன்னாள் புலி உறுப்பினர்களை புனர்வாழ்விற்கு அனுப்ப உத்தரவு

(கொழும்பு)

பூசா தடுப்பு முகாமில் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் 41 பேரை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்க கொழும்பு மாவட்ட மேலதிக நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 முன்னாள் புலி உறுப்பினர்கள் தீவிரவாத முறியடிப்புப் பிரிவுப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவர்களை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப சட்டமா அதிபர் பரிந்துரை செய்திருப்பதாக 'பொலிஸார் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 41 முன்னாள் புலி உறுப்பினர்களையும் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் அருணி ஆட்டிக்கல தீவிரவாத முறியடிப்புப் பிரிவுப் பொலிஸாருக்குப் பணித்தார்.

இதன்படி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களான நான்கு ஆண்கள் பூந்தோட்டம் புனர்வாழ்வு முகாமுக்கும், 37 முன்னாள் பெண் புலி உறுப்பினர்கள் தெல்லிப்பளை புனர்வாழ்வு நிலையத்துக்கும் மாற்றப்படவுள்ளனர்.

# கடலில் மீன்பிடி எல்லை தொடர்பாக மீனவர்களுக்கு விழிப்புணர்வுத்திட்டம்

(கொழும்பு)



இந்தியக் கடல் எல்லைக்குள் ஊடுருவுதல் காரணமாக அதிகமான இலங்கை மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். இதன் காரணமாக மீன்பிடித்துறை அமைச்சானது, இலங்கை மீனவர்கள் அத்துமீறி அயல் நாட்டுக்கடல் எல்லையைத் தாண்டுதல், பொருளாதார எல்லைக்குள் நுழைதலைத் தடுக்கும் நோக்குடன், மீனவர்களுக்கான கல்வித் திட்டமொன்றை ஏற்பாடு செய்யவுள்ளது.

சில இலங்கை மீனவர்கள் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மீன்பிடிச் சட்டத்தை மீறுகின்றனர். இவர்கள் பிடிபடும் பட்சத்தில் கைது செய்யப்பட்டு சிறையிடப்படுவார்கள். இச் சட்டங்கள் தொடர்பாக அதிகமானவர்கள் அறிந்திருப்பதில்லை என மீன்பிடி மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சட்டரீதியான மீன்பிடி மற்றும் சட்டவிரோத மீன்பிடி தொடர்பான பின்விளைவுகள் பற்றிய விழிப்புணர்வுக் கல்வி நிகழ்ச்சிகளை மீனவர்களுக்கு அமைச்சு நடத்தவுள்ளதாகவும் இவ்வாறான நிகழ்ச்சிகளின் மூலம் சட்டவிரோத மீன்பிடி மற்றும் சர்வதேச சட்டங்கள் மீறுதல் போன்றவற்றில் இருந்து தம்மைக் காப்பற்றிக் கொள்ள மீனவர்களுக்கு உதவியாக அமையும் எனவும் கூறினார்.

2010இலும் 2011 ஆரம்பத்திலும் ஏறத்தாழ 100 இலங்கை மீனவர்கள் இந்திய அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்திய அரசானது தனது தனிப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 94 மீனவர்களை விடுவித்துள்ளதாகத் தெரிவித்ததோடு ஏனையவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விமானப்படையின் வைரவிழா நிகழ்விற்கு போர்விமானங்களை அனுப்பாத இந்தியா

(கொழும்பு)

விமானப்படையின் வைரவிழா நிகழ்வுகளுக்கு, முன்னர் திட்டமிட்டிருந்தது போன்று விமானப்படைத் துணைத் தளபதியையோ "சுகோய்'' போர் விமானங்களையோ இந்தியா அனுப்பவில்லை எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விமானப்படையின் வைரவிழா நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பங்கேற்க இந்திய விமானப்படையின் துணைத்தளபதி எயர் மார்ஷல் பிறவுண், "சுகோய்'' போர் விமானங்களின் அணியுடன் கொழும்பு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் விமானப்படையின் வைரவிழா நிகழ்வுகளில் இந்திய விமானப்படையின் "சுகோய்'' போர் விமானங்களின் சாகச நிகழ்வுகள் ஏதும் இடம்பெறவில்லை.

தனியே இலங்கை விமானப்படையின் விமானங்கள் மட்டுமே பங்குபற்றின.

அத்துடன் இந்த நிகழ்வுகளில் இந்திய விமானப்படையின் சார்பில் துணைத் தளபதி எயர் மார்ஷல் பிறவுண் கலந்து கொள்ளவில்லை.

அவருக்குப் பதிலாக இந்திய விமானப்படைத் தலைமையகத்தின் ஆளணிப் பிரிவுக்கான பொறுப்பதிகாரியாக உள்ள எயர் மார்ஷல் அனில் சோப்ராவே இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

முன்னர் திட்டமிட்டிருந்தது போன்று "சுகோய்'' போர் விமானங்களையோ அல்லது விமானப்படையின் துணைத் தளபதியையோ இந்த நிகழ்வுக்கு இந்தியா அனுப்பி வைக்காததற்கான காரணங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

அதேவேளை, இந்த நிகழ்வுக்காகக் கொழும்பு வந்த இந்திய விமானப்படை உயரதிகாரி எயர் மார்ஷல் அனில் சோப்ரா கடந்த செவ்வாய்க்கிழமை, கடற்படைத் தலைமையகத்துக்குச் சென்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக திசநாயக்கவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

# குற்றச்செயல் தொடர்பாக அறிவிப்பதற்கு ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கிலும் தெற்கிலும் இடம்பெறுகின்ற குற்றச் செயல்கள் தொடர்பாக பொலிஸாருக்கு உடனடியாகப் பொதுமக்கள் அறிவிப்பதற்கு வசதியாகத் தொலைபேசி வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்திருக்கின்றது. வடக்கில் இடம்பெறுகின்ற குற்றச்செயல்கள் தொடர்பாகப் புலனாய்வுப் பொலிசாருக்கு (சி.ஐ.டியினர்) யாழ்ப்பாணம் மற்றும் காங்கேசன்துறை ஆகிய இடங்களில் அமைந்துள்ள அவர்களது செயற்பாட்டு அலுவலகத்திற்கு அறிவிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ் அலுவலகத்தை 021 2228355 என்ற தொலைபேசி எண்ணிலும், காங்கேசன் துறை அலுவலகத்தை 011 3188824 என்ற தொலைபேசி எண்ணிலும் கொழும்பு தலைமை அலுவலகத்தை 011 2422176 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு குற்றச் செயல்கள் தொடர்பாக முறையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கீரிமலையை அண்டிய மூன்று கிராமங்களில் விரைவில் மீள்குடியேற்றம் இடம்பெறும்

## யாழ்.மாவட்டத் தளபதி தகவல்



(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாம் சுற்று வட்டாரத்திலிருக்கும் கீரிமலையை அண்டிய மேலும் 3 கிராமங்களில் விரைவில் மக்கள் மீளக் குடியமர்த்தப்படவிருப்பதாக யாழ்மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இந்தக் கிராமங்களில் கண்ணி வெடிகளை அகற்றும் பணிகள் நிறைவடைந்திருப்பதாகவும், விரைவில் அங்கு மக்களைக் குடியேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களுடைய மீள்குடியேற்றங்கள் இப்போதைக்கு நடைபெறாது என்று ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

மக்களை அவர்களுடைய சொந்தப் பிரதேசங்களில் குடியேற்றும் பணிகளை நாம் படிப்படியாக மேற்கொண்டு வருகிறோம். கண்ணிவெடி அகற்றுவதில் உள்ள தாமதம் தான் மீள்குடியேற்றப் பணிகள் தாமதமடையக் காரணம் என்று தெரிவித்த அவர், ஊடகங்கள் பொறுப்பற்ற விதத்தில் இந்த விவகாரத்தைக் கையாள்வதாகக் குற்றஞ்சாட்டினார்.

# சூளை எண்ணெய் ஏற்றுமதி



(கொழும்பு)


இலங்கை மின்சார சபை அனல் மின்நிலையங்களில் பயன்படுத்தும் சூளை எண்ணெய் வாங்குவதைக் குறைத்துள்ளதால் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 25,000 மெட்ரிக்தொன் சூளை எண்ணெயைக் கடந்தவாரம் முதல் தடவையாக ஏற்றுமதி செய்துள்ளதாக பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அண்மையில் பெய்த மழையினால் நீர்த் தேக்கங்கள் பூரணமாக நிரம்பியுள்ளன. இதனால் நீர் மின் உற்பத்தி செய்யும் நிலையங்கள் முழு இயலளவில் தொழிற்படுகின்றன. இதனால் அனல் மின் நிலையங்களுக்கான சூளை எண்ணெயின் கேள்வி பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது என அவர் குறிப்பிட்டா.

எனவே அனல் மின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்தி வைத்திருந்த சூளை எண்ணெயில் ஒரு பகுதியை விற்க வேண்டியிருந்ததாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

எனினும் வாங்கிய விலையிலும் கூடிய விலைக்கு விற்க முடிந்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# கண்ணிவெடி, வெடிபொருள் அபாயம் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு





(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் தொடர்பாக மாணவர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தில் படைப்பிரிவின் பொறியியல் பிரிவு ஈடுபட்டுள்ளது.

குறிப்பாகக் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பிரதேசங்களில் உட்புக நேரிட்டால் என்ன செய்வது, எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது தொடர்பாகவே இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றது.

அத்துடன் கண்ணிவெடிகள் பொறி வெடிகளைக் கண்டால் அவற்றை என்ன செய்வது எனவும் விளக்கமளிக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலங்களில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் தொடர்பான விழிப்புணர்வின்மை காரணமாக மாணவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து யாழ். மாவட்டத் தளபதியின் உடனடியான அறிவுறுத்தலுக்கு அமைவாக சுமார் மூவாயிரம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

கொட்டடி நமசிவாயம், யாழ. வைத்தீஸ்வரா, சென்.சாள்ஸ், வேம்படி உயர்தரப் பாடசாலை, கற்கோவளம், அம்பன், குடத்தனை கரையூர், குடத்தனை அ.மி.த.க. ஆகிய பாடசாலைகளிலேயே இதுவரை இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

# 521 ஆவது படையினரின் ஏற்பாட்டில் குடத்தனை மாணவர்களுக்கு பற்சிகிச்சை

(யாழ்ப்பாணம்)



521 ஆவது பிரிகேட்டின் ஏற்பாட்டில் குடத்தனை அரசினர் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் பற்சிகிச்சை நடைபெற்றது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையின் நடமாடும் மருத்துவக் குழுவினரும், பருத்தித்துறையிலுள்ள 521 ஆவது பிரிக்கேட் படையினரும் இணைந்து இந்தப் பற்சிகிச்சை நடத்தியுள்ளனர்.

மந்திகை வைத்தியசாலையில் பணியாற்றும் டாக்டர் குமரன், டாக்டர் சாய்றவ் ஆகியோர் இணைந்து மாணவர்களுக்குப் பற்களில் ஏற்படும் நோய்கள் தொடர்பாக விளக்கமளித்ததுடன், சிகிச்சைகளையும் மேற்கொண்டனர். இவர்களுக்குப் படைப் பிரிவின் மருத்துவ அணியும், மந்திகை ஆதார வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களும் உதவி புரிந்தனர்.

இந்த முகாமை நிறைவடைந்ததையடுத்து 521 ஆவது பிரிகேட்டின் சிவில் அலுவலகப் பிரிவினரால் பற்தூரிகைகளும், பற்பசைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இந்து மதகுரு, 521 ஆவது பிரிகேட் தளபதி லெப்.கேணல் திக்கிரி திஸநாயக்க, ஆசிரியர்கள், பெற்றோர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# சந்தைக்கு விற்பனைக்கு வரும் முன்னே வாசனைத் திரவியங்கள் பதியவேண்டும்

## சுகாதார அமைச்சின் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

சந்தைக்கு விற்பனைக்கு விடப்படுவதற்கு முன்னர், சகல வகையான வாசனைத் திரவியங்கள் அடங்கிய உற்பத்திகளும், பதியப்பட வேண்டுமென வாசனைத் திரவியங்களின் அதிகார சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்திருப்பதாவது-

அவற்றின் உற்பத்தி செய்யப்படும் திகதி, காலாவதியாகும் திகதி, பதிவு இலக்கம் என்பன பொருட்களில் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

எனவே பொருட்களை வாங்கும் பொதுமக்கள் மேற்குறிப்பிட்ட விடயங்கள் பொறிக்கப்பட்டுள்ளனவா என்பதை நன்கு அவதானித்து, அவை இருந்தால் மட்டுமே அவற்றை வாங்க வேண்டும்.

முகத்திற்குப் பூசும் கிறீம் வகைகள், தோல் பூச்சுக்கான கிறீம் வகைகள், தலைமயிருக்கான “டை” வகைகளில் பெரும் பாலானவை பதிவு எதுவும் செய்யப்படாமலேயே சந்தைகளில் விற்கப்படுகின்றன. இவை எங்கிருந்து கொண்டு வரப்பட்டன என்பது எவருக்கும் தெரியாது.

அத்துடன் இவ்வாறான வாசனைத் திரவியங்கள், பார்மசிகளில் மட்டுமே விற்பனை செய்யப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் சகல கடைகளிலும் இவை விற்பனை செய்யப்படுகின்றன. ஆண்களும், பெண்களும் அரச வைத்தியசாலைகளுக்குச் சென்று தோல், தலை, கண் போன்றவற்றில் ஏற்பட்ட நோய்களுக்குச் சிகிச்சை பெற்று வருவதுடன் வாசனைத் திரவியங்களை உதட்டில் பூசியதனால் ஏற்பட்ட காயத்திற்கும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் சிலரும் இவ்வாறான உற்பத்திகளை வியாபார நிலையங்களுக்கு விற்றுவிட்டுச் சென்றுவிடுவதாகவும் அவ் அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

# கண்ணிவெடிகளை விரைவாக அகற்றி மக்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிலுள்ள கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு சுமார் பத்து வருடமாவது செல்லுமென கண்ணிவெடி நிறுவனங்கள் தெரிவித்து வருகின்றன. ஆனால் எவ்வளவு விரைவாகக கண்ணிவெடிகளை அகற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக அவற்றை அகற்றி மக்களை மீள்குடியமர்த்தவே முயற்சி செய்து வருகின்றோம் என அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயங்களான அரியாலை, கொழும்புத்துறைப் பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பூம்புகாரில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும்போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

உயர்பாதுகாப்பு வலயங்களில் உடனடியாக மீளக்குடியமர்த்துவதற்கு நீதிமன்ற வழக்குத் தாக்கல் கைகொடுக்காது. அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்து காலத்தை இழுத்தடிப்பதை விட உயர்பாதுகாப்பு வலயங்களுடன் தொடர்புடைய படைத் தரப்பினிடம் குறைகளை, பிரச்சினைகளை எடுத்துக் கூறினால் உடனடியான மீள்குடியமர்வு சாத்தியமாகும். நாம் பாதுகாப்புப் படையினர், மிதிவெடி அகற்றும் பிரிவினருடன் ஒன்றிணைந்து செயற்பட்டதன் மூலமே மக்களாகிய நீங்கள் இன்று மீளக்குடியமர முடிகிறது. மீளக்குடியமரும் உங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், அத்தியாவசிய சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுத்தர அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் கலந்துரையாடி வருகின்றேன்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இந்தப் பகுதிகளில் கள ஆய்வை மேற்கொண்டு உதவித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளன. அவை கள ஆய்வை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்கியுள்ளோம். மீளக் குடியமர்ந்த மக்களுக்கான கொடுப்பனவை உங்களுக்குப் பெற்றுத்தர முயற்சி எடுத்துள்ளேன். வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் மூலம் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்க முடியும். யாழ்.மாவட்டம் முழுவதிலுமுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த அந்தத் திட்டம் 1500 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வலிகாமம், வடமராட்சிப் பகுதியில் ஒன்றரை மாதங்களில் 15 ஆயிரம் மக்களை மீளக் குடியமர்த்த முடிந்தது என்றார்.

# பனை தென்னை வள அபிவிருத்தி; அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு



(ஊர்காவற்றுறை)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவற்றுக்கு தீர்வு காணக்கூடிய வழிவகை தொடர்பாகவும் ஆராய்ந்துள்ளார்.

அமைச்சரின் யாழ்.அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மேற்படி மாவட்டங்களின் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகள் தொடர்பாக அந்தந்த பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பிரதிநிதிகள் எடுத்து விளக்கினர்.

இவ்விடர்பாடுகள் தொடர்பில் அந்தந்த பிரதேச செயலர்கள் ஊடாகக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் அவர்கள், பனங்கள் விற்பனை நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் மற்றும் பாடசாலைகள் அமையப் பெற்றுள்ள பொது இடங்களிலிருந்து 500 மீற்றர் தொலைவுக்கு அப்பால் இருக்க வேண்டுமென்பதுடன் விற்பனை நிலையங்கள் பொது மக்களுக்கு இடையூறு இல்லாத வகையிலும் பிரச்சினைகள் ஏற்படாத வகையிலும் அமையப் பெற்றிருக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

அத்துடன் தற்காலத்துக்கு ஏற்ற விதத்தில் விற்பனை நிலையங்கள் நவீனமயப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன், அதன் மூலம் பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென்றும் தெரிவித்தார்.

முக்கியமாக மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பிரதிநிதிகள் முன்வைத்த கோரிக்கை தொடர்பில் ஆராய்ந்து நியாயத்தின் அடிப்படையிலும் துறைசார்ந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தக் கூடிய வகையிலும் இறுதி முடிவுகள் எடுக்கப்படுமென்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் உறுதிபடத் தெரிவித்தார்.

மேலும் நவீனத்துவம் மூலமே தொழில்துறையும் அதுசார்ந்த சமூகமும் வளர்ச்சியடைய முடியும். தொழில்துறை சார்ந்த குடும்பங்களின் வளமான எதிர்காலத்தையும் அபிவிருத்தியையும் கருத்திற் கொண்டு பிரதேச செயலகங்கள் ஊடாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

சுயலாப அரசியல் நோக்கோடு செயற்படுவோர் தொடர்பிலும் கட்டாயத்தின் அடிப்படையில் முடிவெடுப்போர் தொடர்பிலும் மிகக் கவனமாக இருக்க வேண்டும். உங்களது நலன்கள் சார்பாக பிரதேச செயலர்கள் மூலம் கலந்தாலோசித்து உரிய வகையில் தீர்வு காணப்படும் எனக் கூறினார்.

இந்தச் சந்திப்பில் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அருந்தவநாதன், பொலிஸ் அதிகாரி உள்ளிட்டோருடன் பிரதேச செயலர்களும் கலந்து கொண்டனர்.

மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சிவலிங்கம் உள்ளடங்கிய குழுவினர் நேற்றைய சந்திப்பில் அமைச்சரைச் சந்தித்து சங்கங்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

## அரசின் நல்லிணக்க...

விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புலிகளை வெற்றி கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட மனிதாபிமான நடவடிக்கைகள் குறித்து விசாரணை மேற்கொள்ள அமெரிக்க செனட் சபை சுதந்திரமான சர்வதேச அமைப்பொன்றை ஸ்தாபிக்க வேண்டும் என பிரேரணை ஒன்றை தாக்கல் செய்திருந்தது.

அமெரிக்க செனட்டினால் வெளியிடப்பட்ட மேற்படி கருத்துக்களில் எந்தவிதமான அடிப்படைத் தன்மையும் கொண்டிருக்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில், செனட் சபை இலங்கையில் செயற்படும் நல்லிணக்க ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை உரிய முறையில் புரிந்து கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் தற்போது பரிசீலனையில் உள்ள நிலையிலும், முடிவுகள் முற்றுப்பெறாத நிலையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அமெரிக்க செனட்டினால் வெளியிடப்படும் கருத்துக்கள் தற்போதைய நிலையில் உகந்ததல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.நா. நிபுணர் குழுவின்....

இதுவரை தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

பான் கீ மூனிடம் அறிக்கை ஒப்படைக்கப்பட்டதும் அதனை ஊடகங்களுக்கு வெளியிடுவதா இல்லையா என்பது பற்றி தீர்மானிக்கப்படும் எனத் தெரியவருகிறது. நிபுணர்கள் குழு தனது சாட்சியப் பதிவுகளை முடித்துள்ள நிலையில், அந்தக் குழுவுக்கும், இலங்கையின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கும் இடையிலான சந்திப்பு குறித்தும் இதுவரை உறுதியான அறிவிப்புகள் வெளியிடப்படவில்லை.

இலங்கையில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகள் உட்பட பல்வேறு தரப்பினர் மேற்படி நிபுணர் குழுவினர் இலங்கைக்கு விஜயம் செய்து யுத்த சாட்சியங்களைப் பதிவுசெய்வார்கள் என்றும் படைத்தரப்பின் உயர் அதிகாரிகளிடம் போர்க்குற்ற விசாரணைகளை நடத்துவார்கள் என்றும் எதிர்பார்த்தனர்.

எனினும் அவை எதுவும் இடம்பெறாமலே இக்குழுவின் ஆயுட்காலம் நிறைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(மற்றுமொரு செய்தி 9 ஆம் பக்கத்தில்)

## பட்டாசு வெடிவிபத்தில் தொழிற்சாலை உரிமையாளர் பலி

(கொழும்பு)

நீர்கொழும்பு, இந்தகொடெல்ல, கிம்புலாபிட்டிய பிரதேசத்தில் பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் அந்தத் தொழிற்சாலையின் உரிமையாளர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் தொழிற்சாலை உரிமையாளரின் மனைவி காயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் குறிப்பிட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை ஏற்பட்ட இந்த வெடி விபத்தில் பட்டாசு தொழிற்சாலையும் அருகிலிருந்த வீடும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது. சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக்கான...

அதிபர்களையும், யாழ்.பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவையும் சந்தித்து பேசியது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.தற்போதைய காலப் பகுதியிலும் புலம்பெயர் சொந்தங்களின் உறவுகள் இலங்கையின் வடக்கில் பரவலாக காணப்படுவதால் அவர்களின் முன்னேற்றத்திற்காக புலம்பெயர் சொந்தங்கள் உதவ முன்வர வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குடிசன...

மேற்கொள்ளப்பட்டிருந்தது. தற்போது நாட்டில் போர் முடிவுக்கு வந்துள்ளதன் காரணமாக நாடு முழுக்க குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப்படுமென இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் தெரவித்துள்ளது. (மி,14)

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்; ஆளும் கட்சி கூடி ஆராய்வு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் முதலாவது கலந்துரையாடல் நேற்று நடைபெற்றுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இந்தக் கூட்டம் நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடைபெற்றதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இந்த கலந்துரையாடலில் உள்ளூராட்சி சபை தேர்தல்கள் தொடர்பாக கந்தாலோசிக்கப்பட்டதாகவும், கட்சிக்குள் காணப்படும் குறைப்பாடுகள் குறித்து ஆராயப்பட்டதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# வன்னியில் மீண்டும் மழை நெல் அறுவடை பாதிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நேற்றுப் பெய்த திடீர் மழையின் காரணமாக அந்த மாவட்டத்தில் நெல் அறுவடை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தின்போது பாதிக்கப்பட்டிருந்த இந்தப் பகுதிகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்பட்டதன் பின்னர் பெருமளவில் நெற்பயிர்ச்செய்கையை கடந்த வருட கால போகத்தின்போது மேற் கொண்டனர்.

இந்நிலையில் கடந்த வருட இறுதியிலும் இவ்வருட முற்பகு தியிலும் காலநிலையின் மாற்றம் காரணமாக கனமழை பெய்து வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதன் விளைவாக கணிசமான அளவு நெற்பயிர்கள் அழிவுக்குள்ளாகியிருந்தன.

இருந்தும் எஞ்சிய பயிர்கள் தற்சமயம் அறுவடைக்கு தயாராகியுள்ள நிலையில், வெட்டியது பாதியும் வெட்டாதது பாதியுமாக நேற்றைய தினம் திடீரென கனமழை பெய்து அறுவடை நடவடிக்கைகளை பாதித்துள்ளதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.(பா,28)

– தபால்மூல வாக்களிப்பு –

# அதிகாரிகளை கடமைக்கு சமுகமளிக்க அழைப்பு

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தபால் மூல வாக்கெடுப்பு நடைபெறவுள்ள 8, 9 ஆம் திகதிகளில் உறுதிப்படுத்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் கட்டாயம் கடமைக்கு சமுகமளிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

தபால் மூல வாக்கெடுப்பின் போது உறுதிப்படுத்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாரிய கடமையுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

8 ஆம் திகதி தபால் மூல வாக்கெடுப்பு நடத்துவது அவசியம் எனவும், அன்றைய தினம் அதனை நடத்தி முடிக்க முடியாவிட்டால் மாத்திரமே 9 ஆம் திகதி நடத்த வேண்டுமெனவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.


# மருத்துவத் துறையில் இந்தியாவின் முதலீடு

(கொழும்பு)

இந்தியாவின் முன்னணி வைத்தியசாலைகள் நிறுவனமான போர்டீஸ் ஹெல்த்கெயர் நிறுவனம் இலங்கையின் லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறுவனத்தின் 29 சதவீத பங்குகளை 400 கோடி ரூபாவுக்கு வாங்கவுள்ளது.

லங்கா ஹொஸ்பிடல்ஸ் நிறுவனம் முன்னர் அப்பலோ ஹொஸ்பிடல்ஸ் நிறுவனம் என்ற பெயரில் இயங்கிமை குறிப்பிடத்தக்கது.

பிரபல வர்த்தகர் ஹரி ஜயவர்தனவின் கட்டுப்பாட்டிலுள்ள டிஸ்ரீலர்ஸ் நிறுவனத்திடம் இப்பங்குகள் இருந்தன. இந்த விற்பனை குறித்து கொழும்பு பங்குச் சந்தைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



...படிப்பகம்
...நகர சபை, யாழ்ப்பாணம்.

# ஐ.தே.க.வின் மேன்முறையீடு நீதிமன்றம் முற்றாக நிராகரிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவென சிலாபம் பிரதேச சபைக்காக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாகல் செய்த வேட்பு மனுவை இரத்து செய்யுமாறு கோரி ஐக்கிய தேசியக் கட்சியால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்து அதனை நிராகரித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கவினால் குறித்த மேன்முறையீடு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சிலாபம் பிரதேச சபைக்கென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தாக்கல் செய்த வேட்பு மனுவில் இளைஞர்கள் பிரிவில் 35 வயதைக் கடந்த ஒருவரது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தனது மனுவில் தெரிவித்திருந்தது.

அதனால் அந்த வேட்பு மனுவை நிராகரிக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி மனுமூலம் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டது.

எனினும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம்ஜயந்த சார்பில் நீதிமன்றில் ஆஜரான சட்டத்தரணி, குறித்த மேன்முறையீடு சட்டத்திற்கு முன் விவாதிக்க முடியாத ஒன்று என வாதிட்டார்.

அதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் மேன்முறையீட்டை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளக் கூடாதென அவர் நீதிமன்றைக் கேட்டுக் கொண்டார்.

இந்த எதிர்ப்பை ஏற்றுக் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் ஐக்கிய தேசியக் கட்சியின் மனுவை விவாதிக்க முடியாதென நிராகரித்துள்ளது.

# சுவிஸில் புகலிடக் கோரிக்கை; இலங்கையருக்கு மூன்றாவது இடம்

சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரி 51 இலங்கையர்கள் கடந்த மாதம் விண்ணப்பித்து உள்ளனர். சுவிஸில் புகலிடம் கோரி கடந்த மாதம் விண்ணப்பித்த வெளிநாட்டவர்களில் இலங்கையர்கள் மூன்றாம் இடத்தில் உள்ளனர். கடந்த மாதம் 1262 வெளிநாட்டவர்கள் விண்ணப்பித்து இருக்கின்றனர்.

ஜனவரி மாதத்தைக் காட்டிலும் இத்தொகை 27 பேரால் அதிகம். இவர்களில் அநேகர் நைஜீரியர்கள் 117 பேர். அடுத்த நிலையில் சிரியர்கள் 69 பேர் உள்ளனர்.

# பாடசாலைகள் இயங்கும் நேரம் மாலை மூன்று மணிவரை நீடிப்பு

(கொழும்பு)

பாடசாலைகள் இயங்கும் நேரத்தைப் பிற்பகல் 3 மணி வரை நீடிக்க கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தீர்மானித்துள்ளார். இதற்கு முன்னர் பாடசாலை நேரம் 2 மணி வரை இடம்பெற்றதுடன், அது பின்னர் 1.30 மணியாக மாற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சின் "சிறந்த பாடசாலைகள் ஆயிரம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஆயிரம் பாடசாலைகளில் கல்வி நேரத்தை பிற்பகல் 3 மணிவரை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்காலவேளைக்குள் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கப்படும். அரசாங்க ஊழியர்கள் பிற்பகல் 4.30 வரையும், பொலிஸார் 24 மணித்தியாலங்களும் கடமை புரிகின்றனர்.

ஆனால் அரசாங்க ஊழியர்களான ஆசிரியர்கள் மாத்திரம் 1.30 மணிக்கு வீடு செல்கின்றனர் என கல்வியமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானில் உள்ள பாடசாலைகள் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறுகின்றமையால்தான் அங்குள்ளவர் திறமை வாய்ந்தவர் களாக உள்ளனர் என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# இலங்கையர்களை மீட்க அரசு துரித ஏற்பாடு

(கொழும்பு)

லிபியாவிலிருந்து வெளியேற விரும்பும் இலங்கையர்களுக்கான பயண ஏற்பாடுகளை இலங்கை அதிகாரிகள் துரிதமாகச் செய்து வருவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கெய்ரோவிலிருந்து 84 இலங்கையர்கள் நேற்று நாட்டுக்கு அழைத்துவரப்பட்டுள்ளதுடன், மேலும் இந்த வார இறுதியில் 350 தொடக்கம் 400 இலங்கையர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படவுள்ளதாகவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. வார இறுதியில் 350 தொடக்கம் 400 பேர் இலங்கைக்கு வருவதற்காக முற்றுமுழுதாக ஆசனங்கள் ஒதுக்கப்பட்ட விமானம் தயார்படுத்தப்பட்டுள்ளதுடன், விமானம் திரிப்போலியிலிருந்து ஜோர்தானிற்குச் சென்று பின்பு டுபாய் வழியாக கொழும்பினை வந்தடையும் எனவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# இலங்கை அகதி பலி; அவுஸ்திரேலியருக்கு 8 வருட சிறை

அவுஸ்திரேலியர் ஒருவர் ஹெரோயின் பாவித்த நிலையில் காரை ஓட்டிச் சென்று விபத்துக்குள்ளானதில் இலங்கை அகதியொருவர் பலியானார்.

இச் சம்பவம் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் பலியானவர் திருவடிவேல் சிறிஸ்கந்தராஜா எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டாங்டெனோயிங் எனும் இடத்திலுள்ள ரயில் கடவையைக் கடக்கும் போதே விபத்து இடம் பெற்றுள்ளது. குறித்த இலங்கை அகதி விபத்துக்குள்ளாவதற்கு 6 மாதங்களுக்கு முன்னதாகவே அவுஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார்.

இந்தஅகதி, விபத்து இடம் பெற்ற இடத்திலிருந்து 27 மீற்றர்களுக்கு அப்பால் தூக்கி எறியப்பட்ட நிலையில் பலியானார்.

31 வயதான குற்றவாளிக்கு 8 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இதில் குறைந்த பட்சம் ஆறு ஆண்டுகளாவது சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாணின் விலையில் மாற்றம் இல்லை

(கொழும்பு)

பாணின் விலையில் மாற்றம் ஏற்படுவதாக வெளியான செய்தி உண்மைக்குப் புறம்பானது என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பாணின் விலை அதிகரிக்கப்படும் என வெளியான செய்தி தொடர்பாக எமது செய்திப் பிரிவு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் சமையல் எரிவாயு மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலை அதிகரிப்பை அடுத்து பாண் உள்ளிட்ட பேக்கரிப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படும் அபாயம் தோன்றியிருந்தது.

அத்துடன், உலக சந்தையில் கோதுமை மாவின் விலை 50 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 10 1928 — மறைவு 04 03 2011



### அமரர்
### வீரசிங்கம் இராசமணி

வாழ்வெனும் நெடும் பயணத்தில்
வந்தவர்களில் நீங்களும் ஒருவரானீர்.
வாழ்க்கை வாழ்வதற்கே... எனும் தத்துவத்தில்
வளமொடு; சிறப்பொடுவோங்கி
காலனவன் கணக்கதின் வேளையதில்
கண்மூடித்துயின்று விட்டீர்கள்.
போகுமிடம் தெரிவதில்லையாயினும்
உங்களைப் புரிந்தவர்கள்
வழியனுப்பி வைக்கின்றோம்.
சென்று... மீண்டும் வருக...
எங்களிடம்!

எமது நிறுவன உரிமையாளர் V.சிறிதரனின் அன்புத் தாயார் மரணமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கொனிக்கா கலர் லாப்,
சிறிராம் ஜுவல்லர்ஸ் ஊழியர்கள்,
தாயகம்: சிறுவர்களும், ஊழியர்களும்.

(C/507)


# பதின்ம வயதினருக்கு பாலியல்கல்வி அவசியம்

## பேராசிரியர் சாவித்திரி குணசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

கட்டிளமைப் பருவத்தினர் தம்மை கெடுதிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் வகையில் அவர்களுக்கு வலுவூட்ட பாடசாலை கலைத்திட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகம், வீட்டு வன்முறைகள், பாலியல் கல்வி என்பன இடம்பெற வேண்டும் என சட்டத்துறை பேராசிரியரும் கொழும்பு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தருமான சாவித்திரி குணசேகர தெரிவித்தார்.

யுனிசெப் வெளியீடான "உலக சிறுவர்களின் நிலை - 2011" எனும் நூலின் அறிமுக விழாவின் போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

10 - 18 வயதிற்குட்பட்டோரை கட்டிளமைப் பருவத்தினர் எனக் குறிப்பிட்ட அவர், இச்சிறுவர்கள் தம்மைப் பற்றிய சரியான தீர்மானத்தை எடுக்க மேலே குறிப்பிட்ட விடயங்களில் கல்வியூட்டப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக சிறுவர்களுடன் பேசுவது எமது கலாசாரத்திற்கு ஏற்புடையதல்ல என்ற அபிப்பிராயம் உண்டு. ஆனால் இவ்வகைக் கல்வி அவர்களுக்கு பாதுகாப்பை வழங்கும் என அவர் கூறினார்.

இளம் பராயத்தினர் 16 வயதில் சுயமாக இயங்குவர். ஆனால் இதை இலங்கையர் பலர் அறிந்திருக்கவில்லை என அவர் குறிப்பிட்டார்.

இந்த உண்மை மதிக்கப்பட்டால் சிறுவர் உரிமையை மீறுதல் தொடர்பான பல பிரச்சினைகள் தீர்க்கப்படும் என அவர் கூறினார்.

இலங்கையில் மூன்று மில்லியனுக்கு மேற்பட்ட கட்டிளமைப் பருவத்தினர் உள்ளனர். 15 - 19 வயதுக்குட்பட்ட பெண்களில் 54 சதவீதமானோர் கணவன் மனைவியை அடிப்பதை நியாயப்படுத்தினர் என இலங்கைக்கான யுனிசெப் அறிக்கை - 2011 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

# சட்டவிரோதப் படகுப்பயணிகளுக்கு பிணைவழங்க நீதிமன்றம் மறுப்பு

மீன்பிடிப்படகுகளின் மூலம் சட்டவிரோதமான முறையில் வெளிநாடுகளுக்குச் செல்ல முற்பட்ட வேளையில், கைது செய்யப்பட்ட 17 பேருக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிணை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த இவர்கள் நேற்றுமுன்தினம் இரகசிய பொலிஸாரினால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட குறித்த சந்தேக நபர்களை விடுதலை செய்யுமாறு அவர்களது சட்டத்தரணிகள் கேட்டுக்கொண்ட போதிலும், அவர்கள் தொடர்பான முழுமையான விசாரணைகள் முடிவடையவில்லை என நீதிமன்றில் இரகசியப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதையடுத்து, இவர்களை பிணையில் விடுதலை செய்ய மறுப்பு தெரிவித்த நீதிமன்றம், இவர்களை எதிர்வரும் 17ஆம் திகதி வரை தடுப்புக் காவலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலி கடற்பரப்பிலிருந்து சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா நோக்கிப் பயணிக்க முற்பட்ட வேளையிலேயே இவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இரகசியப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கும் புலிகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பிருக்கலாம் என பொலிஸாரினால் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல. 373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.